## (ஒ) வெளிநாட்டு வர்த்தகம்

### 1. பொதுப்படையான போக்குகள்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1970ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு ஏற்றுமதி வருவாய் குறிப்பிட்ட அளவு அதிகரிப்படைந்தது. இவ்வதிகரிப்பு, 1968ஆம் ஆண்டு தொடக்கம் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புகளில் மிகவும் உயர்ந்ததாகும். இவ்வதிகரிப்புகளுக்குப் பெருமளவு காரணம், தேயிலை, இறப்பர் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளின் ஏற்றுமதி அளவுகளிலேற்பட்ட விரிவாகும்; இவ்விளைவுகள் தேயிலை, மற்றும் மூன்று முக்கிய தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளினால் மேலும் பலப்படுத்தப்பட்டன.

1970ஆம் ஆண்டுக்குரிய ஏற்றுமதிப் பெறுமதியானது மீள ஏற்றுமதி உட்பட ரூ. 20,330 இலட்சமாகவும், இறக்குமதிப் பெறுமதியானது ரூ. 23,130[1] ஆகவும் அமைந்து, ரூ. 2,800 இலட்சங்கொண்ட வணிகப் பொருள் வர்த்தகக் குறையை ஏற்படுத்தியது.

ஏற்றுமதிகளின் ரூபாப் பெறுமதி, 1968ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பைக் காட்டியதைத் தவிர, 1966ஆம் ஆண்டிலிருந்து ஏற்றுமதி வருமானங்கள் வீழ்ச்சிப் போக்கினையே காட்டின. எப்படியிருப்பினும் ஐ. அ. டொலர் பெறுமானங்களின்படி வீழ்ச்சிப் போக்கானது, 1966ஆம் ஆண்டில் தொடங்கி, 1968ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தது. 1970ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதிகளின் பெறுமதி 1969ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதைவிட ரூ. 1,170 இலட்சம் அதிகமாகும். 1970ஆம் ஆண்டில் ஏற்றுமதிவருமானங்களின் டொலர் பெறுமானம் 3,420 இலட்சம் ஐ. அ. டொலர்களாகவும், இத்தொகை முன்னைய ஆண்டினதைவிட 200 இலட்சம் ஐ. அ. டொலர்கள் அதிகமானதாகும்.

1968ஆம் ஆண்டில் அதிகரிக்கத் தொடங்கிய இறக்குமதிப் பெறுமானங்கள் 1969ஆம் ஆண்டில் உச்ச நிலையை அடைந்து, 1968ஆம் ஆண்டு மட்டத்தினைவிட, ரூ. 3,700 இலட்சத்தால் அல்லது 17 சதவீதத்தால் அதிகரித்தது. எப்படியிருப்பினும் இறக்குமதிப் பெறுமானங்களின் உயர்ச்சிப்போக்கு 1970ஆம் ஆண்டில் மாற்றப்பட்டு, ஆண்டுக்குரிய மொத்த இறக்குமதிப் பெறுமானங்கள் ரூ. 2,300 இலட்சத்தால் அல்லது 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 23,130 இலட்சமாக அமைந்தது.

1969ஆம் ஆண்டின் மிக உயர்ந்த குறைநிலையான ரூ. 6,270 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1970ஆம் ஆண்டின் இறுதியில் தேறிய வர்த்தக நிலையானது ரூ. 2,800 இலட்சங்கொண்ட வணிகப் பொருள் வர்த்தகக் குறைநிலையைக் காட்டியது. 1970ஆம் ஆண்டில் பாதகமான வர்த்தக இடைவெளியில் ஏற்பட்ட குறைவு, ஏற்றுமதி வருவாய்களிலேற்பட்ட குறிப்பிடத்தக்க

1. மொத்த இறக்குமதிகளின் எண்தொகைகள் கவனத்துடன் விளக்கப்படல் வேண்டும். முன்னைய ஆண்டறிக்கைகளில் எடுத்துக்காட்டியதுபோல, இறக்குமதிகளை வெளிக்கொணர்வதற்கும், அவைகளின் தொடர்பான பதிவுகளைச் சுங்க ஏடுகளிற் பதிவுசெய்வதற்குமிடையில் கணிசமானளவு காலதாமதம் இருக்குமாயின், குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் உண்மையாகப் பெறப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதிக்கும், சுங்கப் பதிவேடுகளிற் காட்டியுள்ளபடி, சுங்கத்தினூடாக வெளிக்கொணரப்பட்ட பெறுமதிக்கும் கணிசமான அளவு வேறுபாடுகள் இருக்கக்கூடும். இக்கூற்று முக்கியமாக அரசாங்க இறக்குமதிகளுக்கும் அரிசி, கோதுமை மா, சீனி ஆகிய இறக்குமதிகளுக்கும் பொருத்தமானதாகும்.

அதிகரிப்பு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இறக்குமதிப் பெறுமானங்களில் ஏற்பட்டுள்ள கூர்மையான வீழ்ச்சி எனும் இரு காரணிகளினாலும் ஆகும். 1970ஆம் ஆண்டுக்குரிய வணிக வர்த்தகக் குறைநிலை, 1968ஆம் ஆண்டின் 7 சதவீதத்துடனும் 1969ஆம் ஆண்டின் 33 சதவீதத்துடன் பார்க்கும்போது மொத்த ஏற்றுமதி வருமானங்களில் 14 சதவீதமாக விளங்கியது; வர்த்தகக் குறைநிலையை நிதியீட்டுவதற்கு உள்நாட்டு ஏற்றுமதி வருமானங்களைவிட மூலங்களிலேயே நாடு அதிகம் தங்கியிருக்க வேண்டியிருந்தது.[1] 1970 ஆம் ஆண்டின் இறக்குமதிகளைப் பொறுத்தவரையில் நுகர்ச்சிப் பொருட்கள் இறக்குமதியில் அதிகரிப்பும் அதேவேளையில் ''நடுத்தரப் பொருட்கள்'', ''முதலீட்டுப் பொருட்கள்'' என்பவற்றின் இறக்குமதியில் வீழ்ச்சியும் காணப்பட்டன. 1970ஆம் ஆண்டில் நுகர்ச்சிப் பொருட்கள் பெறுமதி[1] முன்னைய ஆண்டினைவிட 6 சதவீதம் அதிகரித்தது. ''நுகர்ச்சிப் பொருட்கள்'' பிரிவில் ''உணவும் குடிவகைகளுக்குமான'' பங்கு, அரிசி, கோதுமை மா, சீனி[2] என்பவற்றின் அதிகரித்த இறக்குமதிகள் காரணமாக அதிகரித்தபோது, ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்களின்'' பங்கு வீழ்ச்சியடைந்தது. ''நடுத்தரப் பொருட்கள்'', ''முதலீட்டுப் பொருட்கள்'' என்பவற்றின் பெறுமதி முறையே 24 சதவீதத்தாலும், 22 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

1969ஆம் ஆண்டில் 5 சதவீதத்தால் அதிகரித்த எல்லா ஏற்றுமதிகளினதும் மொத்த அளவு (மத்திய வங்கியின் வர்த்தகக் குறிகாட்டிகளால் அளவிட்டபடி அடியாண்டு 1967 = 100) 1970ஆம் ஆண்டில் 102 ஆக அமைந்து 4 சதவீதத்தால் அதிகரித்தது. 1969ஆம் ஆண்டில் மாற்றமுறாது இருந்த எல்லா ஏற்றுமதிகளின் சராசரி விலைக்குறிகாட்டி ஆய்வுக்குரிய ஆண்டில் 1 சதவீதத்தால் அதிகரித்து 118 ஆகக் காணப்பட்டது.

எல்லா இறக்குமதிகளினதும் மொத்த அளவுக் குறிகாட்டி (மத்திய வங்கி வர்த்தகக் குறிகாட்டி அடியாண்டு 1967 = 100) 1969ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் அதிகரித்தும், 1970ஆம் ஆண்டில் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தும் 102 ஆகக் காணப்பட்டது. இறக்குமதிகளுக்கான முக்கிய பிரிவுகளுக்குரிய அளவுக் குறிகாட்டிகள், 1970ஆம் ஆண்டில் ''நடுத்தரப் பொருட்கள்'' 86 இலும் முதலீட்டப் பொருட்கள் 116 இலும் அமைந்து முறையே 17 சதவீதத்தாலும் 33 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்ததைப் புலப்படுத்தும்; இதேவேளையில் ''நுகர்ச்சிப் பொருட்கள்'' 106 ஆக அமைந்து 14 சதவீதத்தால் அதிகரித்தன.

1970ஆம் ஆண்டில் எல்லா இறக்குமதிகளினதும் சராசரி விலைக் குறிகாட்டி 140 ஆக அமைந்து, 1969ஆம் ஆண்டைவிட 4 சதவீத அதிகரிப்படைந்து தொடர்ந்தும் உயர்ச்சிப் போக்கைக் காட்டியது. ''நடுத்தரப் பொருட்கள்'', ''முதலீட்டப் பொருட்கள்'' என்பவற்றின் சராசரி விலைக்குறிகாட்டிகள் 1970ஆம் ஆண்டில் 9 சதவீதத்தாலும், 17 சதவீதத்தாலும் அதிகரித்து முறையே 136, 148 ஆகக் காணப்பட்டன; இதேவேளையில் ''நுகர்ச்சிப் பொருட்கள்'' 139 ஆக அமைந்து, 1 சதவீத எல்லை அதிகரிப்பைக் காட்டின.

இலங்கை வர்த்தகத்தின் பண்டமாற்று வீதங்கள் (வங்கிக் குறிகாட்டி அடியாண்டு 1967=100) கடந்த ஈராண்டுகளாகச் சீர்கேடடைந்து வந்து 1970 ஆம் ஆண்டில் 1969இன் 88 இலிருந்து 84 உக்கு வீழ்ச்சியடைந்தன.

---

1. 1970ஆம் ஆண்டில் பல்வேறு பண்ட உதவித் திட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட வெளிநாட்டு உதவி ரூ. 3,222 இலட்சமாகும்.

2. இதுதொடர்பான விவரமான கணக்குகளுக்கு பக்கங்கள்266, 268ஐப் பார்க்கவும்.

## அட்டவணை II (ஒ) 1

### வெளிநாட்டு வர்த்தகம் — 1966/70

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | குறிகாட்டியின் எண்கள் (1967=100) | | | | வர்த்தக மாற்று வீதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *ஏற்று மதிகள் (க. வ. பெ.) | இறக்கு மதிகள் (கொ. க. கா.) | வர்த்தக நிலுவை | அளவு | | விலை | | |
| | | | | முழு ஏற்று மதிகளும் | முழு இறக்கு மதிகளும் | முழு ஏற்று மதிகளும் | முழு இறக்கு மதிகளும் | |
| 1966 | 1,700 | 2,028 | – 328 | 96 | 118 | 107 | 98 | 109 |
| 1967 | 1,690 | 1,738 | – 48 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1968 | 2,035 | 2,173 | – 138 | 103 | 101 | 117 | 126 | 93 |
| 1969 | 1,916 | 2,543 | – 627 | 98 | 108 | 117 | 134 | 88 |
| 1970 | 2,033 | 2,313 | – 280 | 102 | 102 | 118 | 140 | 84 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப்புள்ளிவிவரங்கள், இலங்கை மத்திய வங்கி.

* மீள ஏற்றுமதி செய்யப்பட்டவையும் அடங்கும்

1. திருத்தியமைக்கப்பட்ட குறிகாட்டிகள்.

*1969ஆம் ஆண்டில் அரிசி, கோதுமை மா, சீனி என்பவற்றின் இறக்கு மதிகள் தொடர்பான சுங்கத் தரவுகள், உணவு ஆணையாளராற் பெறப்பட்ட இப்பொருட்களின் உண்மையான இறக்குமதிகளைவிட ரூ. 440 இலட்சம் மிகைப்படுத்திக் காட்டியபோது 1970ஆம் ஆண்டில் சுங்கத் தரவுகள் உணவு ஆணையாளரின் இறக்குமதிகளைவிட ரூ. 180 இலட்சத்தால் மிகைப்படுத்திக் காட்டின.*

*1969ஆம் 1970ஆம் ஆண்டுகளுக்குரிய மொத்த இறக்குமதிகள் (சுங்கத் தரவுகள்) உணவு ஆணையாளராற் பெறப்பட்ட உண்மையான, அரிசி, கோதுமை மா, சீனி என்பவற்றின் அளவினைப் பிரதிபலிப்பதற்குச் சீராக்கஞ் செய்யப்பட்டால், மொத்த இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 25,430 இலட்சம், ரூ. 23,130 இலட்சம் என்பதிலிருந்து முறையே 1969இலும் 1970இலும் ரூ. 24,950 இலட்சம் ஆகவும், ரூ. 22,950 இலட்சமாகவும் குறைந்திருக்கும். இவ்வாறு சீராக்கஞ் செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 1970ஆம் ஆண்டின் இறக்குமதிகளின் பெறுமதி முன்னைய ஆண்டினதைவிட ரூ. 2,040 இலட்சம் அல்லது 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.*

*உணவு ஆணையாளரின் உண்மையான இறக்குமதிகளுக்காகச் சீராக்கஞ் செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 1969ஆம் ஆண்டின் வணிகப்பொருள் வர்த்தகக் குறையானது, ரூ. 6,270 இலட்சத்திலிருந்து ரூ. 5,830 இலட்சமாகவும் 1970ஆம் ஆண்டுக்குரிய குறையானது ரூ. 2,800 இலட்சத்திலிருந்து ரூ. 2,620 இலட்சமாகவும் குறைக்கப்படும்.*

### 2. ஏற்றுமதிகள்

*1970ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானங்களிலேற்பட்ட ரூ. 1,170 இலட்சங்கொண்ட அதிகரிப்பு பெருமளவுக்கு தேயிலை மற்றும் உள்ளூர் ஏற்றுமதி வருமானங்களிலேற்பட்ட அதிகரிப்பின் காரணத்தால் ஏற்பட்டதாகும். இதே வேளையில் இறப்பர், மற்றும் மூன்று முக்கிய தெங்குப் பொருட்களின் உற்பத்திகளினதும் ஏற்றுமதி வருவாய்கள் குறைந்த அளவில் அதிகரித்துக் காணப்பட்டன; மீள ஏற்றுமதிகளின் வருவாய்கள் சிறிதளவில் வீழ்ச்சியுற்றன. அட்டவணை II (ஒ) 2 ஏற்றுமதிகளின் அமைப்பினையும் மொத்த ஏற்றுமதி வருமானங்களில் அவற்றின் தொடர்பான சதவீதப் பங்குகளையும் எடுத்துக் காட்டுகின்றது.*

## அட்டவணை II (ஒ) 2

### ஏற்றுமதிகளின் அமைப்பு — 1966–70

| பண்டங்கள் | பெறுமானம் ப. இ. ரூபாய்களில் | | | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 |
| தேயிலை ... | 1,027 | 1,061 | 1,162 | 1,062 | 1,120 | 60 | 63 | 57 | 55 | 55 |
| இரப்பர் ... | 337 | 282 | 331 | 431 | 440 | 20 | 17 | 16 | 22 | 22 |
| மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகள் அவற்றின் பிரிவுகள் ... | 196 | 167 | 331 | 221 | 237 | 12 | 10 | 16 | 12 | 12 |
| (அ) கொப்பரா ... | 25 | 18 | 34 | 26 | 23 | 2 | 1 | 2 | 1 | 1 |
| (ஆ) தேங்காயெண்ணெய் | 108 | 88 | 133 | 108 | 116 | 6 | 5 | 7 | 6 | 6 |
| (இ) தேங்காய்த் துருவல் | 63 | 61 | 164 | 87 | 98 | 4 | 4 | 8 | 5 | 5 |
| ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் ... | 116 | 121 | 152 | 161 | 198 | 7 | 7 | 8 | 8 | 10 |
| மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள் ... | 1,676 | 1,631 | 1,976* | 1,875 | 1,995 | 99 | 97 | 97 | 98 | 98 |
| மீள ஏற்றுமதி செய்யபட்டவை | 24 | 59 | 60 | 41 | 38 | 1 | 3 | 3 | 2 | 2 |
| **மொத்தம்** ... | **1,700** | **1,690** | **2,035** | **1,916** | **2,033** | **100** | **100** | **100** | **100** | **100** |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விவரங்கள்.

* ஏற்றுமதி வருமானங்கள் கிட்டிய பத்து இலட்சம் ரூபாய்களுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

### தேயிலை

*உற்பத்தி*

1970ஆம் ஆண்டின் தேயிலை உற்பத்தி 4,680 இலட்சம் இருத்தல்களாகவும், 1969ஆம் ஆண்டினைவிட 160 இலட்சம் இருத்தல்கள் குறைவாகவும் 1962ஆம் ஆண்டு தொடக்கம் பதிவுசெய்யப்பட்ட மிகக் குறைந்ததாகவும் காணப்பட்டது. 1968ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1970ஆம் ஆண்டின் உற்பத்தி 280 இலட்சம் இருத்தல்களாற் குறைந்து காணப்பட்டது. இந்த உற்பத்தியிற் காணப்பட்ட வீழ்ச்சி 1969ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில், தோட்டத்துறையில் குறைந்த அளவு உரம் பயன்படுத்தப்பட்டமை, குறிப்பாக முதலாம் மூன்றும் காலாண்டுப் பகுதியின், அதிகரித்த மழையினுல் ஏற்பட்ட சீர்கேடான காலநிலை, கொய்தலிருந்த கட்டுப்பாட்டு முறை, இரண்டாம் காலாண்டுப் பகுதியில் உற்பத்தியில் சிறந்த முறைகளைக் கையாண்டமை எனும் பல காரணிகளால் ஏற்பட்டதாகும். உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி உயர்ந்த, நடுத்தரப் பிரதேசத் தேயிலைகளில் மட்டும் ஏற்பட்டவிடத்து, தாழ்ந்த பிரதேசத் தேயிலைகளில் அட்டவணை II (ஒ) 3இற் காணப்படுவது போல அதிகரிப்பு ஏற்பட்டது.

## அட்டவணை II (ஒ) 3

### உயர அடிப்படையிலான தேயிலை உற்பத்தியும் மொத்தத்தில் அவற்றின் சதவீதப் பங்குகளும்

பத்து இலட்சம் இருத்தல்களில்

| உயர அடிப்படையிலான பிரிவுகள் | 1969 | | 1970 | | 1969ஐ விட 1970இல உண்மையான மாற்றங்கள் |
|---|---|---|---|---|---|
| | அளவு | % | அளவு | % | |
| உயர்ந்த பிரதேசம் ... | 187.2 | 38.7 | 178.8 | 38.2 | — 8.4 |
| நடுத்தரப் பிரதேசம் ... | 170.9 | 35.3 | 159.2 | 34.0 | — 11.7 |
| தாழ்ந்த பிரதேசம் ... | 126.1 | 26.0 | 129.8 | 27.8 | + 3.7 |
| மொத்தம் ... | **484.2** | **100.0** | **467.8** | **100.0** | **— 16.4** |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

### ஏற்றுமதி

1970ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 4,600 இலட்சமாக அமைந்து 1969ஆம் ஆண்டினைவிட 150 இலட்சம் அதிகமாகக் காணப்பட்டது. திசெம்பர் 1969இல் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு கொழும்பு, திருக்கோணமலைத் துறைமுகங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களாற் பாதிக்கப்பட்டதுடன் இவற்றின் விளைவுகள் 1970ஆம் ஆண்டின் ஏற்றுமதி அளவினையும் பாதித்திருக்கக்கூடும். உற்பத்தி குறைந்தபோதும், கையிருப்பிலிருந்த தேயிலையைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி அளவில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. கிடைக்கப்பெறும் தரவுகள் இலங்கையின் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் கையிருப்பு 1969 திசெம்பரில் 870 இறாத்தல்களாகவிருந்து, 1970[1] நவெம்பரில் 450 இலட்சம் இறாத்தல்களாகக் குறைந்ததைப் புலப்படுத்துகின்றன.

கொழும்பு ஏலத்துக்கு விடப்பட்ட தேயிலையின் அளவு 1970ஆம் ஆண்டில் 3,730 இலட்சம் இறாத்தல்களாக அமைந்து 140 இலட்சம் இறாத்தல்களால் வீழ்ச்சியடைய இலண்டன் ஏலத்துக்கு நேரடியாகக் கப்பலேற்றப்பட்ட அளவு 910 இலட்சம் இறாத்தல்களாக அமைந்து, 30 இலட்சம் இறாத்தல்களால் அதிகரித்துக் காணப்பட்டது. பிரத்தியேக விற்பனைகள் மூலம் 40 இலட்சம் இறாத்தல் தேயிலை விற்பனை செய்யப்பட்டது. 1969ஆம் ஆண்டுக்குரிய அளவு 50 இலட்சம் இறாத்தல்களாகும். அட்டவணை II (ஓ) 4, உற்பத்தி, ஏற்றுமதிகள், கொழும்பு ஏலங்களில் விற்பனையான அளவு இலண்டன் ஏலங்களுக்கு நேரடியாகக் கப்பலிடப்பட்ட அளவு, பிரத்தியேக உடன்படிக்கைகள் மூலம் விற்பனையான தேயிலையின் அளவு ஆகியவற்றின் தரவுகளைக் காட்டுகிறது.

### அட்டவணை II (ஓ) 4

**உற்பத்தியும், ஏற்றுமதிகளும், கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட அளவுகளும் இலண்டன் ஏலங்களுக்குக் கப்பலிடப்பட்ட அளவும்**

பத்து இலட்சம் இறாத்தல்களில்

| ஆண்டு | உற்பத்தி | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலங்களில் விற்பனையான அளவு | இலண்டனுக்கு நேரடியாகக் கப்பலிடப்பட்ட அளவு | தனிப்பட்ட விற்பனைகள்† |
|---|---|---|---|---|---|---|
| | | சுங்கத்தரவுகள் | உண்மையான கப்பலிடுகைகள் | | | |
| 1965 | 503 | 495 | 474 | 368 | 125 | — |
| 1966 | 490 | 441 | 441 | 359 | 108 | — |
| 1967 | 487 | 478 | 480 | 369 | 110 | 5 |
| 1968 | 496 | 460 | 446 | 369 | 111 | 5 |
| 1969 | 484 | 445‡ | 417 | 387 | 88 | 5 |
| 1970 | 468 | 460‡ | 465 | 373 | 91 | 4 |

மூலங்க : தேயிலைக் கட்டுப்பாட்டாளரின் நிருவாக அறிக்கைகள்,
இலங்கைச் சுங்கப்புள்ளிவிவரங்கள்,
கொழும்புத் தரகர் சங்கம்.

† தனிப்பட்ட தேயிலை விற்பனை 1967 மாச்சு மாதம் 1ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

‡ உடனடித் தேயிலை உட்பட.

### சேருமிடங்களின் படியான ஏற்றுமதிகள்

1970ஆம் ஆண்டிலும் ஐக்கிய இராச்சியமே 4.5 சதவீதத்தால் தன்னுடைய பங்கினை அதிகரிப்பதன் மூலம் தொடர்ந்தும் இலங்கைத் தேயிலையின் முக்கிய வாடிக்கைக்காரராக இருந்தது. முன்னைய ஆண்டினைப்போலவே ஐக்கிய அமெ

1. தரவு — தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,

ரிக்க நாடுகள் இரண்டாவது அதிக கொள்வனவு செய்யும் நாடுகளாகவும், அதே சமயம் அவுத்திரேலியா, ஈராக்கு, தென் ஆபிரிக்கக் கூட்டரசு போன்ற நாடுகள் அடுத்த முக்கிய கொள்வனவு செய்யும் நாடுகளாகவும் விளங்கின. அட்டவணை II (ஔ) 5, 1969ஆம், 1970ஆம் ஆண்டுகளுக்கான சேருமிடங்களின் படியான ஏற்றுமதி அமைப்பையும், மொத்தத் தேயிலை ஏற்றுமதி அளவில் அவற்றின் சதவீதப் பங்குகளையும் தருகின்றது.

அட்டவணை II (ஔ) 5

**நாடுகளின்படியான தேயிலை ஏற்றுமதி அமைப்பும் அவற்றின் சதவீதப் பங்குகளும்**

| | தேயிலை ஏற்றுமதிகளின் அளவுகள் (ப. இ. இ.) | | (ப. இ. ரூ.) மொத்த அளவின் சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1969 | 1970 |
| ஐக்கிய இராச்சியம் ... | 131.3 | 156.1 | 29.5 | 34.0 |
| ஐ.அ. நாடுகள் ... | 45.4 | 39.7 | 10.2 | 8.6 |
| அவுத்திரேலியா ... | 34.0 | 28.8 | 7.6 | 6.3 |
| ஈராக்கு ... | 33.2 | 28.3 | 7.5 | 6.2 |
| தென்னாபிரிக்கக் கூட்டரசு ... | 27.3 | 25.9 | 6.1 | 5.6 |
| ஏனைய நாடுகள் ... | 174.0 | 180.9 | 39.1 | 39.4 |
| கூட்டு மொத்தம் ... | **445.2** | **459.7** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளிவிபரங்கள்.

**கொழும்பு ஏல விற்பனைகள்**

1970 ஆம் ஆண்டின் கொழும்புத் தேயிலை ஏல விற்பனைகளில் விற்கப்பட்ட எல்லாத் தேயிலைகளினதும் தேறிய சராசரி விலை இறுத்தல் ரூ. 1.63 சதமாகக் காணப்பட்டது. இது, 1969ஆம் ஆண்டின் விலைகளை விட 10 சதம் அல்லது 6 சதவீதம் அதிகமானதாகும். இந்த அதிகரிப்பு உயர்ந்த நடுத்தர பிரதேசத் தேயிலைகளில் மட்டும் ஏற்பட்டவிடத்து, தாழ்ந்த பிரதேசத் தேயிலை விலைகள் மாற்றமுறாது அதே மட்டத்தில் இருந்தன. நடுத்தர பிரதேசத் தேயிலை விலை இறுத்தல் ரூ. 1.58 சதமாக அமைந்து 18 சதவீத அதிகரிப்படைய, உயர்ந்த பிரதேசத் தேயிலை இறுத்தல் ரூ. 1.92 சதமாக அமைந்து 12 சதத்தால் அதிகரித்தது. இந்தத் தேயிலை விலைகளிலேற்பட்ட அதிகரிப்பு, 1969 செத்தெம்பர் நடுப்பகுதியில் தொடங்கி, 1970ஆம் ஆண்டின் முதற்காற்பகுதியிலும் தொடர்ந்து, இரண்டாம் காற் பகுதியில் தேறிய சராசரி விலை இறுத்தல் ரூ. 1.58 சதமாகக் குறைவடைய வீழ்ச்சியடைந்தது. இது உயர்ந்த நடுத்தரப் பிரதேசங்களினது தேயிலைகளின் தேறிய சராசரி விலைகள் முதற் காற்பகுதியின் விலைகளான ரூ. 1.95 சதம், ரூ. 1.58 சதம் என்பனவற்றிலிருந்து முறையே ரூ. 1 80 சதம், ரூ. 1,51 சதமாக வீழ்ச்சியடைந்ததன் மூலம் பிரதிபலித்தன. எனினும், தாழ்ந்த பிரதேசத் தேயிலை விலை ரூ. 1.37 சதமாகவே இருந்தது. இந்தத் தேறிய சராசரி விலையின் வீழ்ச்சி, திம்புல்லை, டிக்கோயா தேயிலைகளின் பருவகாலத் தரக் குறைவுக்குக் காரணமாக இருந்ததெனலாம். இந்தக் காலப்பகுதியின் பயிரே கடந்த பல ஆண்டுகளில் மிகவும் ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியதாக அமைந்ததுடன், குறித்த காலப் பகுதிக்குரிய சிறப்பியல்புடனும், நறுஞ் சுவையுடனும் சிறிதளவு தேயிலையே கிடைத்தது.[1] எனினும், 1969ஆம் ஆண்டின் இரண்டாம் காற்பகுதியுடன் ஒப்பிடும்போது உயர்ந்த, நடுத்தரப் பிரதேசத் தேயிலை உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது. உயர்ந்த பிரதேச உற்பத்தி 23 சதத்தாலும், மத்திய பிரதேச உற்பத்தி 33 சதத்தாலும் உயர்ந்தவிடத்துத் தாழ்ந்த பிரதேச விலை 6 சதத்தால் மட்டுமே அதிகரித்தது. இங்கு காட்டப்பட்டுள்ள கூரிய விலை வித்

1. லோப்ஸ் அன் வோக்கர் லிமிட்டெட், தேயிலைச் சந்தை எப்பிறலும் யூனும் பக்கம் 3.

தியாசங்கள். 1969ஆம் ஆண்டின் இரண்டாம் காற்பகுதியின் தேயிலை விலைகளி லேற்பட்ட மந்தத்தினுல் ஏற்பட்டதாகும். ஆண்டின் மூன்றும் காற்பகுதியில் தேறிய சராசரி விலை இருத்தலுக்கு ரூ. 1.76 சதத்தினுல் ஏற்பட்ட அதிகரிப்பு, ஊவா மாகாணங்களின் பி.ஓ.பி., பி.ஓ.பி தூள் எனும் இரு தரத் தேயிலை களிலும் ஒகத்து மாதத்தில்[1] அதிக சாயம் தரும் தேயிலையைத் தேர்ந்தெடுப் பதற்கு இருந்த கேள்வியின் காரணமாக உயர்ந்த விலைகள் பெறப்பட்டமை யாலாகும். விலையில் அதிகரிப்புக்குரிய இன்னுமொரு காரணி, மீண்டும் ஏலத் திற்கு ஐ. சோ. சா. கு. பங்கு கொள்ள வந்தமையேயாகும். நான்காம் காற் பகுதியில் சராசரித் தேறிய விலை இருத்தலுக்கு ரூ. 1.56 சதத்தில் 1969ஆம் ஆண்டின் நான்காம் காற்பகுதியுடனும் முன்னைய காற்பகுதியுடனும் ஒப்பிடு மிடத்து முறையே 20 சதத்தாலும் 8 சதத்தாலும் குறைந்து காணப்பட்டது. இந்தச் சராசரித் தேறிய விலையிலேற்பட்ட வீழ்ச்சி முன்னைய காற்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து உயர்ந்த, நடுத்தரப் பிரதேசத் தேயிலை விலைகளில் முறையே இரு. 44 சதவீத, 21 சதவீத வீழ்ச்சி ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தது. எனினும், தாழ்ந்த பிரதேசத் தேயிலை, இருத்தலுக்கு 5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. அட்டவணை II (ஒ) 6, உற்பத்தி, ஏற்றுமதி, விலைகள் என்பவற் றின் தரவுகளைக் காட்டுகின்றது.

**அட்டவணை II (ஒ) 6**

**தேயிலை உற்பத்திகளும், ஏற்றுமதிகளும், விலைகளும் — 1966–1970**

| ஆண்டு | உற்பத்தி அளவு ப. இ. இருத்தல்கள் | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலச் சராசரி தேறிய விலை இருத்தலுக்கு ரூபா | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு ப. இ. இருத்தல்கள் | க. வ. பெ. விலை இருத்தலுக்கு ரூ. | உயர்ந்த பிரதேசம் | நடுத்தரப் பிரதேசம் | தாழ்ந்த பிரதேசம் | எல்லாத் தேயிலைகளும் |
| 1966 | 490 | 441 | 2.33 | 1.84 | 1.46 | 1.37 | 1.57 |
| 1967 | 487 | 478 | 2.22 | 1.82 | 1.47 | 1.20 | 1.50 |
| 1968 | 496 | 460 | 2.52 | 1.93 | 1.67 | 1.63 | 1.75 |
| 1969 | 484 | 445 | 2.39 | 1.80 | 1.40 | 1.38 | 1.53 |
| 1970 | 468 | 460 | 2.44 | 1.92 | 1.58 | 1.38 | 1.63 |
| 1969 | | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 124 | 118 | 2.47 | 1.89 | 1.44 | 1.42 | 1.58 |
| 2ஆம் காலாண்டு | 149 | 127 | 2.40 | 1.57 | 1.18 | 1.31 | 1.35 |
| 3ஆம் காலாண்டு | 93 | 123 | 2.27 | 1.88 | 1.45 | 1.30 | 1.54 |
| 4ஆம் காலாண்டு | 118 | 76 | 2.44 | 1.88 | 1.58 | 1.48 | 1.64 |
| 1970 | | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 115 | 99 | 2.41 | 1.95 | 1.58 | 1.37 | 1.64 |
| 2ஆம் காலாண்டு | 140 | 137 | 2.44 | 1.80 | 1.51 | 1.37 | 1.58 |
| 3ஆம் காலாண்டு | 94 | 133 | 2.44 | 2.20 | 1.72 | 1.37 | 1.76 |
| 4ஆம் காலாண்டு | 119 | 90 | 2.45 | 1.76 | 1.51 | 1.42 | 1.56 |

மூலங்கள்: தேயிலைக் கட்டுப்பாட்டாளரின் நிருவாக அறிக்கைகள், இலங்கைச் சுங்கப்புள்ளிவிவரங்கள். கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்.

### தேயிலை ஏற்றுமதித் தீர்வைக்கான விடுதொகைத் திட்டம்

தேயிலை ஏற்றுமதித் தீர்வைக்கான விடுதொகைத் திட்டம் 1960ஆம் ஆண்டு முழுவதும் எவ்வித மாற்றமுமின்றி நடைமுறையிலிருந்து அட்டவணை II (ஒ) 7 விடுதொகைகள் வழங்கப்பட்ட அளவுகளையும் விடுதொகைகட்கான 1970ஆம் ஆண்டு முழுவதும் வழங்கப்பட்ட தொகைகளையும் பற்றிய விவரங் களைத் தருகின்றது.

1. வோப்சும் வோக்கர் லிமிட்டெட், தேயிலைச் சந்தை அறிக்கை யூலை செத்தெம்பர் 1970 பக்கம் 4.

**அட்டவணை (II) (ஒ) 7**

**தேயிலை ஏற்றுமதித் தீர்வை விடுதொகைத்திட்டம்—கொழும்பு ஏலங்கள்**

| | விடுதொகை அளிக்கப்பட்ட தேயிலையின் அளவு (இறாத்தல்கள்) | அளிக்கப்பட்ட விடுதொகையின் பெறுமானம் (ரூபாய்கள்) |
|---|---|---|
| உயர்ந்த பிரதேசம் .. | 118,660,510 | 5,933,025 |
| நடுத்தரப் பிரதேசம் ... | 121,950,083 | 16,217,969 |
| தாழ்ந்த பிரதேசம் .. | 122,986,719 | 20,095,052 |
| மொத்தம் .. | 363,597,312 | **42,246,046** |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

**உள்நாட்டு நுகர்வு**

தேயிலையின் உள்நாட்டு நுகர்ச்சி 1969ஆம் ஆண்டு நுகர்ச்சியான 406 இலட்சம் இருத்தலோடு பார்க்கும்போது 1970ஆம் ஆண்டில் 416 இலட்சம் இறாத்தல்களென மதிப்பிடப்பட்டது. இது, ஏறக்குறைய 1970ஆம் ஆண்டின் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தத் தேயிலையின் 8.9 சதவீதமாகும்.

**இலண்டன் ஏலங்கள்**

1970ஆம் ஆண்டில் இலண்டன் ஏல விற்பனைகளில் விற்கப்பட்ட எல்லாத் தேயிலைகளினதும் சராசரி விலை இருத்தலுக்கு 49.71 பென்னியாகும். இது, 1969ஆம் ஆண்டினைவிட இருத்தலுக்கு 5.60 பென்னிப்படி 1968ஆம் ஆண்டினை விட 2.08 பென்னி அதிகமானதாகக் காணப்பட்டது. இங்கு ஏற்பட்ட விலை அதிகரிப்பு, எல்லா நாடுகளிலும் பங்கு கொள்ளப்பட்டது. 1970ஆம் ஆண்டு இலண்டன் ஏல விற்பனைகளின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட ஏதுவாக அமைந்த காரணிகள், இலண்டன் ஏலங்களில் குறைந்த அளவு தேயிலை விற்கப்பட்டமை, குறிப்பாக இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் தேயிலை, மொறிசியஸ் தேயிலை உடன்படிக்கையின் விளைவாக 1970ஆம் ஆண்டில் முக்கிய தேயிலை உற்பத்தி நாடுகள் 900 இலட்சம் இருத்தல்கள் கொண்ட கறுப்புத் தேயிலையை ஏற்றுமதி செய்யாது வைத்திருக்க ஒப்புக்கொண்டமையைத் தொடர்ந்து, உயர்ந்த தரத் தேயிலைகள் அதிகமாகக் கிடைத்தமை, ஒகத்து[1] வரை இருப்புகளில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சியும், 1969ஆம் ஆண்டின் சராசரி விலையினைக் குறைக்கச் செய்த 1969ஆம் ஆண்டில் விற்பனைப் பெறுமதியில் ஏற்பட்ட மந்தமும் ஆகும். அட்டவணை II (ஒ) 8 உற்பத்தி நாடுகளால் இலண்டன் ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலைகளின் அளவு, பெறப்பட்ட சராசரி விலைகள் என்பன வற்றின் தரவுகளைத் தருகின்றது.

**அட்டவணை II (ஒ) 8**

**உற்பத்தி நாடுகளினால் இலண்டன் ஏலங்களின் விற்கப்பட்ட தேயிலைகளின் அளவுகளும், அவைகளின் சராசரி விலைகளும்**

| நாடுகள் | இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட அளவுகள் (ப. இ. இறாத்தல்களில்) | | | | சராசரி விலைகள் (இருத்தலுக்கு பெ.) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1967 | 1968 | 1969 | 1970 | 1967 | 1968 | 1969 | 1970 |
| 1. வட இந்தியா .. | 113.3 | 131.4 | 133.1 | 67.1 | 53.71 | 48.66 | 45.25 | 50.91 |
| 2. தென் இந்தியா .. | 12.1 | 15.5 | 10.9 | 5.6 | 42.48 | 42.26 | 34.44 | 44.00 |
| 3. இலங்கை முழுவதும் | 96.2 | 103.9 | 94.5 | 80.4 | 52.33 | 49.30 | 48.51 | 51.14 |
| 4. ஆபிரிக்கா முழுவதும் | 56.0 | 72.9 | 77.4 | 81.5 | 40.60 | 44.12 | 38.88 | 47.91 |
| 5. மொத்தம் ... | **284.3** | **328.4** | **320.5** | **237.5** | **49.81** | **47.63** | **44.11** | **49.71** |

மூலம்: இலண்டன் தேயிலைத் தரகர்கள் சங்கம்,

1. 1969 ஒகத்தில் வீழ்ச்சியடையத் தொடங்கிய ஐ. இ. தேயிலை இருப்புக்கள் 1970 ஒகத்து வரை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. இப்போக்கு, ஒகத்துக்குப் பின், ஐ. இ. கப்பலில் ஒப்படைக்கப்பட்டு, தற்காலிகமாகத் தேசிய துறைமுக வேலை நிறுத்தங்கள் காரணமாகத் கண்டங்களின் துறைமுகங்கட்குத் திருப்பப்பட்ட தேயிலை மீண்டும் வரத் தொடங்கியமையால், இருப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆண்டிறுதியில் விலை வீழ்ச்சிகள் ஏற்பட்டமையாலும் மாற்றப்பட்டது.

1970ஆம் ஆண்டில் இலண்டன் ஏலங்களில் இரு. 51.14 பென்னிப்படி விற்பனை செய்யப்பட்ட இலங்கையின் எல்லாத் தரத் தேயிலைகளினதும் சராசரி விலை 1969ஆம் ஆண்டினை விட இருத்தலுக்கு 2.63 பென்னி அதிகரிப்பையும் 1968ஆம் ஆண்டினை விட இருத்தலுக்கு 1.84 பென்னி அதிகரிப்பையும் காட்டியது. கடந்த ஈராண்டுகளாக இலங்கைத் தேயிலையினூற் பெறப்பட்டு வந்த மிக உயர்ந்த சராசரி விலை 1970ஆம் ஆண்டில் கென்னியாத் தேயிலையினுல்[1] பெறப்பட்டது. சராசரி விலையிலேற்பட்ட அதிகரிப்பானது உயரப்படியான மூன்று வகுப்புத் தேயிலைகளினுலும் பங்குகொள்ளப்பட்டது. பெருமளவு அதிகரிப்பு 7.81 பென்னிகளால் உயர்ந்த தாழ்ந்த பிரதேசத் தேயிலையில் ஏற்பட்டது.

இதே வேளையில் நடுத்தரப் பிரதேசத் தேயிலைகளின் சராசரி இருத்தல் விலை 3.39 பென்னிகளாலும், உயர்ந்த பிரதேசத் தேயிலையின் சராசரி விலை இருத்தலுக்கு 0.84 பென்னிகளாலும் அதிகரித்தது. நடுத்தர, தாழ்ந்த பிரதேசத் தேயிலைகளின் விலைகள் 1970ஆம் ஆண்டில் உயர்ந்தமைக்குரிய காரணங்கள், 1969ஆம் ஆண்டில் அவற்றின் விற்பனைப் பெறுமதிகள் குறைந்தமையாலும், அத்தகைய தேயிலைகளுக்கு, 1970ஆம் ஆண்டில் ஐ. இ. இருப்பு மட்டங்களால் குறைந்தமையைத் தொடர்ந்து ஏற்பட்ட அதிகரித்த கேள்வியும் எனலாம்.

1970ஆம் ஆண்டில் பெருந்தேயிலை உற்பத்தி நாடுகளால் உற்பத்தி செயயப்பட்ட மொத்தத் தொகை 16,700 இலட்சம் இருத்தல்களாகும். இது 1969[2] ஆம் ஆண்டின் உற்பத்தியை விட 520 இலட்சம் இருத்தல்கள் அதிகமாகக் காணப்பட்டது. (சனவரி முதல் நவெம்பர் வரையான காலப்பகுதியினது கிழக்காபிரிக்கத் தரவுகள்)

**உடன் தேயிலை**

1970ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உடன் தேயிலையின் அளவு 2,48,895 இருத்தல்களாக அமைந்து, 1969ஆம்[3] ஆண்டுடன் ஒப்பிடுகையில் 51,677 இருத்தல்கள் அல்லது 17.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. 1968ஆம் ஆண்டின் உடன் தேயிலை வெளியீடு 2,97,022 இருத்தல்களாகும். சுங்கப் புள்ளிவிவரங்கள், 1970ஆம் ஆண்டின் ரூ. 25 இலட்சம் பெறுமதியான 2, 36,321 இருத்தல்கள் உடன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதைப் பதிவுசெய்துள்ளன. ஐக்கிய இராச்சியத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தொகை 1,54,937 இருத்தல்கள் அல்லது மொத்த உற்பத்தி நிலை 66 சதவீதமாகவும், சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு, யப்பான், அவுத்திரேலியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தொகைகள் முறையே 27,598 இருத்தல்கள், 19,423 இருத்தல்கள், 18,073 இருத்தல்களாகவும் அமைந்தன.

**பக்கட்டில் அடைக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள்**

கடந்த ஈராண்டுகளாகக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டிய பக்கெட்டுத் தேயிலை ஏற்றுமதிகள் 1970ஆம் ஆண்டில் 19 இலட்சம் இருத்தல்களால் அதிகரித்து 170 இலட்சம் இருத்தல்களாக விளங்கியது. 1967ஆம் ஆண்டு தொடக்கம் உயர்ச்சிப் போக்கினைக் காட்டிய இலங்கையிலிருந்து ஏற்றுமதி

1. 1969ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலைகட்கும் (எல்லாத் தரங்களினதும் சராசரி) கென்னியாத் தேயிலைகட்கும் இடையே இருந்த வித்தியாசம் இருத்தலுக்கு 0.33 பென்னிப்படி இலங்கைக்குச் சார்பாக இருந்தது. ஆனுல் 1970ஆம் ஆண்டில் இந்நிலைமாறி 1.83 பென்னி கென்னியாவுக்குச் சார்பாக அமைந்தது.
2. யோன், கீல், தொம்சன் வைற் லிமிற்றெட் வாராந்தத் தேயிலைச் சந்தை அறிக்கை 1971, பெப்புருவரி 20.
3. தரவுகள் – தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

செய்யப்பட்ட பக்கெட்டுத் தேயிலைப் பெறுமதி ஆய்வுக்குரிய ஆண்டிலும் தொடர்ந்து அதன் உயாச்சிப் போக்கினைக் காட்டி, ரூ. 43 இலட்சத்தால் அதிகரித்து ரூ. 416 இலட்சமாக விளங்கியது. பக்கெட்டுத் தேயிலை ஏற்றுமதிகளின் 75 சதவீதமளவில் மத்திய கிழக்கு நாடுகட்கு அனுப்பப்பட்டன. லிபியா ரூ. 268 இலட்சம் பெறுமதியான 118 இலட்சம் இருத்தல் பக்கெட்டுத் தேயிலையைக் கொள்வனவு செய்து இலங்கையின் மிகப் பெரிய கொள்வனவாளராக விளங்கியது.

### பன்னாட்டுத் தேயிலை ஆலோசனைக் கூட்டம்

1970ஆம் ஆண்டு நவெம்பரில் புதுடெல்கியில் நடைபெற்ற உணவு விவசாய நிறுவன ஆலோசனைக் குழுவின் தேயிலை தொடர்பாக நடைபெற்ற ஒரு கூட்டத்தில், 1971ஆம் ஆண்டுக்கும் 1970ஆம் ஆண்டின் உலக ஏற்றுமதி அளவான 13,110 இலட்சம் இருத்தல்களையே வைத்திருக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் தனிப்பட்ட நாடுகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது தொடர்பான முடிவுகளை, ரோமில் நடைபெறவிருக்கும் அடுத்த கூட்டத்திற்கு பின் போட்டு வைக்கப்பட்டது. தேயிலை விலைகளை நிலையானதாக்குவதற்கு நீண்டகால நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்றுமதி இறக்குமதி நாடுகள் எல்லாம் ஒருங்கே உழைக்கவேண்டுமென இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இக்குழு அதிக தேயிலை நுகர்ச்சிக்கு வழிவகுத்தல், தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளுடன் உயர்ந்த தீர்வைகள் தேயிலை மீதான ஏற்றுமதி வரிகள் என்பவற்றைக் குறைப்பதற்கான பேச்சு வார்த்தைகளுக்கான அவசியம் என்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தியது. வருமானம் தரக்கூடிய சம விலைகளை நிலைப்படுத்துவதற்கு ஏற்றுமதி அதிகரிப்பு, உலகக் கேள்வி அதிகரிப்புக்குச் சமமாக அமைய வேண்டுமென்று ஏற்றுமதி நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன. இந்நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகள் அடுத்த கூட்டம்வரை பின்போடப்பட்டுள்ளன.

### இரப்பர்

#### உற்பத்தி

1969ஆம் ஆண்டில் 460 இலட்சம் இருத்தல்களாற் சிறிதளவு அதிகரிப்பை அடைந்த இரப்பர் உற்பத்தி, 1970ஆம் ஆண்டில் 184 இலட்சம் இருத்தல்கள் அல்லது 5.5 சதவீதத்தால் கூர்மையாக விரிவடைந்தது. பொதுவாகப் பாலெடுக்கும் நடவடிக்கைகள் அடிக்கடி இடைப்பருவக் காற்று மழைகளாலும், காலநிலைகளாலும் தடைப்பட்டபோதும், பொதுவாக 1970ஆம் ஆண்டு இரப்பர் உற்பத்திக்குச் சாதகமாக அமைந்தது. உற்பத்தி அதிகரிப்புக்குரிய இன்னமொரு காரணி 1970ஆம் ஆண்டில், மீளப் பயிரிடப்பட்ட நிலங்கள் முதிர்ச்சியடைந்தமையுமாகும்.

1969ஆம் ஆண்டின் உற்பத்தியைவிட, 2,110 இலட்சம் இருத்தல்களாக அமைந்து 164 இலட்சம் இருத்தல்கள் அல்லது 8.5 சதவீதத்தால் அதிகரித்த சீட் இரப்பர் 1970ஆம் ஆண்டின் மொத்த இரப்பர் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்படுவதற்குப் பெருமளவு காரணமாக அமைந்தது. கிரேப் இரப்பர் உற்பத்தியும் 1969ஆம் ஆண்டில் 1,363 இலட்சம் இருத்தல்களிலிருந்து 20இலட்சம் இருத்தல்களால் மட்டமாக அதிகரித்து ஆய்வுக்குரிய ஆண்டில் 1,383 இலட்சம் இருத்தல்களாகக் காணப்பட்டது.

#### நுகர்ச்சி

இயற்கை இரப்பரின் உள்நாட்டு நுகர்ச்சி மொத்த உற்பத்தியில் 83 இலட்சம் இருத்தல்கள் அல்லது 2.4 சதவீதமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 5 இலட்சம் இருத்தல்கள் அதிகரித்துக் காணப்பட்டது.

**ஏற்றுமதிகள்**

1969ஆம்[1] ஆண்டுடன் ஒப்பிடும்போது 1970ஆம் ஆண்டின் இரப்பர் ஏற்றுமதி அளவு 394 இலட்சம் இருத்தல்கள் அல்லது 12.5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1970ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில், இரப்பர் கப்பலேற்றுதலில் சனவரியில் கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தால் குறிப்பிடத்தக்க அளவு வசதியீனத்துக்குட்பட்டதனைத் தவிர, நன்முறையில் நடைபெற்றது.

இரப்பர் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட அதிகரிம்பு பெருமளவுக்கு, 1969 ஆம் ஆண்டினைவிட 420 இலட்சம் இருத்தல்கள் அல்லது 24 சதவீதத்தால் அதிகரித்த சீட் இரப்பரிலேயே அடங்கியதெனலாம்.

இரப்பரின் உற்பத்திகள், ஏற்றுமதிகள், விலைகள் தொடர்பான தரவுகள் அட்டவணை II (ஒ) 9இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஒ) 9**

**இரப்பரின் உற்பத்திகளும், ஏற்றுமதிகளும், விலைகளும்**

| ஆண்டு | உற்பத்தி (ப. இ. இரு.) | | | ஏற்றுமதிகள் (ப. இ. இரு.) | | | க. ஏ. பெ. விலை (இரு. ரூ. ச.) | | | கொழும்புச் சந்தை விலை இருத்தலுக்கு (ரூ. ச.) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | ஆர்.எஸ் எஸ். இல.1 | லெற்ரெக்ஸ் இல. 9 |
| 1966 | 170.7 | 116.7 | 288.8 | 180.1 | 117.8 | 298.4 | 1.19 | 1.05 | 1.13 | 0.89 | 1.00 |
| 1967 | 187.5 | 126.5 | 315.7 | 163.3 | 127.4 | 290.9 | 1.04 | 0.89 | 0.97 | 0.79 | 0.88 |
| 1968 | 195.0 | 131.2 | 327.9 | 189.7 | 137.8 | 328.3 | 0.98 | 1.04 | 1.01 | 0.88 | 1.11 |
| 1969 | 194.6 | 136.3 | 332.5 | 179.7 | 135.1 | 314.8 | 1.34 | 1.41 | 1.37 | 1.04 | 1.16 |
| 1970 | 211.0 | 138.3 | 350.9 | 221.7 | 132.5 | 354.2 | 1.23 | 1.26 | 1.24 | 0.91 | 1.12 |
| 1970இன் | | | | | | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 53.6 | 36.8 | 90.8 | 16.5 | 36.0 | 52.5 | 1.48 | 1.33 | 1.38 | 1.00 | 1.07 |
| 2ஆம் காலாண்டு | 45.1 | 31.1 | 76.6 | 81.2 | 38.1 | 119.3 | 1.32 | 1.27 | 1.31 | 0.92 | 1.09 |
| 3ஆம் காலாண்டு | 52.6 | 36.1 | 89.2 | 70.3 | 28.7 | 99.0 | 1.17 | 1.23 | 1.19 | 0.86 | 1.14 |
| 4ஆம் காலாண்டு | 59.7 | 34.2 | 94.3 | 53.6 | 29.7 | 83.3 | 1.11 | 1.18 | 1.14 | 0.85 | 1.16 |

மூலம்: இரப்பர் ஆணையாளரின் நிருவாக அறிக்கைகள்
இலங்கைச் சுங்கத் தரவுகள்
இலங்கை இரப்பர் வர்த்தக சங்கம்.

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்**

மக்கள் சீனக் குடியரசினது 1969ஆம் ஆண்டின் 1,580 இலட்சம் இருத்தல்கள் (மொத்த இரப்பர் ஏற்றுமதியில் 50 சதவீதம்) கொள்வனவோடு ஒப்பிடும்போது 1970ஆம் ஆண்டில் 1,870 இலட்சம் (மொத்த இரப்பர் ஏற்றுமதியில் 53 சதவீதம்) இருத்தல்களைக் கொள்வனவு செய்து இலங்கை இரப்பரின் முக்கிய கொள்வனவு நாடாகத் தொடர்ந்தும் விளங்கியது.

1969ஆம் 1970ஆம் ஆண்டுகளுக்குரிய சேரிடங்களின்படியான இரப்பர் ஏற்றுமதித் தரவுகள், சதவீதப் பங்குகளுடன் அட்டவணை II (ஒ) 10 காட்டுகிறது.

1. சுங்கப் பதிவுகளின் அடிப்படையில் 1970ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த இரப்பரின் அளவு 3,540 இலட்சம் இருத்தல்களாகும். ஆனால் உண்மையாக 1970ஆம் ஆண்டில் கப்பலேற்றிய இரப்பரின் அளவு 3,400 இலட்சம் இருத்தல்களாகும்.

அட்டவணை II (ஒ) 10

இரப்பர் ஏற்றுமதிகள் பற்றிய நாடுகளின்படியான பட்டியலும் சதவீதப் பங்குகளும்

| நாடு | | அளவு (ப. இல. இரு.) | | மொத்தத்தின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | | 1969 | 1970 | 1969 | 1970 |
| மக்கள் சீனக் குடியரசு | ... | 157.6 | 186.8 | 50.1 | 52.7 |
| போலாந்து | ... | 14.3 | 26.3 | 4.5 | 7.4 |
| சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு | ... | 20.3 | 23 0 | 6.4 | 6.5 |
| ஐ.அ.நா. | ... | 18.0 | 22.0 | 5.7 | 6.2 |
| ஐ.சோ.ச.குடியரசு | ... | 23.2 | 21.9 | 7.4 | 6.2 |
| உருமேனியா | ... | 13.4 | 13.3 | 4.3 | 3.8 |
| யப்பான் | ... | 9.0 | 8.7 | 2.9 | 2.5 |
| ஏனைய நாடுகள் | ... | 59.0 | 52.2 | 18.7 | 14.7 |
| மொத்தம் | ... | **314.8** | **354.2** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விவரங்கள்.

**அங்காடி விலை அசைவுகள்**

1970ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கொழும்பு அங்காடியில் இருத்த லொன்றின் சராசரி விலை ரூ. 1.05 சதவீதமாக இருந்த ஆர். எஸ், எஸ். தரம் 1 சீட் இரப்பரின் விலை 1970 ஒற்றோபரில் பன்னாட்டு அங்காடி விலைப் போக்குகளுக்கிணங்க இருத்தலுக்கு ரூ. 0.83 சதத்தால் வீழ்ச்சியடைந்தது. சீன மக்கள் குடியரசு மீண்டும் கொள்வனவைத் தொடங்கியமையால் பன்னாட்டு அங்காடி விலைகளிலேற்பட்ட விலையேற்றங்களைத் தொடர்ந்து இருத்தலுக்கு 5 சதங்களால் அதிகரித்து, இரு. ரூ. 0.88 சதமாகியபோது நவெம்பரில் இரப்பர் அங்காடி மிதவை அடைந்தது. ஆர். எஸ். எஸ். கிரேப் 1இன் சீட் இரப்பரின் ஆண்டுச் சராசரி விலை 1970ஆம் ஆண்டில் ரூ. 0.91 ஆக அமைந்து, 1969ஆம் ஆண்டினைவிட இருத்தலுக்கு 13 சதம் அல்லது 12.5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. லெற்ரெக்ஸ் கிரேப் தரம் 1இன் கொழும்புச் சந்தை விலை ஆர். எஸ். எஸ். தரம்1இன் போக்கினைத் தொடர்ந்து 1970ஆம் ஆண்டு சனவரியில் சராசரி விலை இருத்தல் ரூ. 1.09 சதத்திலிருந்து ஒற்றோபரில் ரூ. 0.92 சதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. லெற்ரெக்ஸ் கிரேப் தரம் IX இன் ஆண்டுச் சராசரி விலை இருத்தலுக்கு ரூ. 1.12 சதமாக அமைந்து முன்னைய ஆண்டினோடு ஒப்பிடுமிடத்து இருத்தலுக்கு 4 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

பன்னாட்டு அங்காடியில் 1969ஆம் ஆண்டுக்கு மாறாக 1970ஆம் ஆண்டில் இயற்கை இரப்பரின் விலைகள் வீழ்ச்சிப் போக்கினைக் காட்டி ஒற்றோபர் அளவில் இருத்தல் 18 பென்னி வீழ்ச்சியடைந்தது; இதுவே இலண்டனில் 1968 மே தொடக்கம் பதிவுசெய்யப்பட்ட ஆகக் குறைந்த விலையாகும். 1970ஆம் ஆண்டில் விலைகள், கிழக்குநாடுகளில், உற்பத்தி இருப்புக்கள் என்பனவற்றின் அதிகரிப்புக் காரணமாக நுகர்ச்சியில் பொதுவான வீழ்ச்சி ஏற்பட்டதன் விளைவாக 1970ஆம் ஆண்டில் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டது. விலை வீழ்ச்சிக்கு ஏதுவாக இருந்த ஏனைய காரணிகள் சந்தையிலிருந்து மக்கள் சீனக் குடியரசு பெப்புருவரியிலிருந்து பங்குபற்றாது இருந்தமையும், ஐ. அ. கையிருப்

பில் வைத்திருந்த இரப்பரை விற்பனை செய்யத் தொடங்கப்போகின்றதென்ற வதந்தியும் ஆகும். கையிருப்புக்களை ஐ. அ. வெளியீடு செய்யக்கூடுமென்ற அச்சம் மே மாத இடைப் பகுதியில் பொது நிருவாக சேவையினுல் கையிருப்பு வெளியீடு மாதத்துக்கு 7,000 தொன்கள் மட்டுமே என்று உத்தியோக பூர்வ மாக அறிவிக்கப்படும் வரை இருந்து வந்தது. எனினும், மிகவும் தாழ்ந்த மட்டத்தை அடைந்த அங்காடி விலை வீழ்ச்சிகளை நிறுத்தும் நோக்கத்துட னும், உற்பத்தி நாடுகளுக்கு உதவி செய்யும் நோக்கத்துடனும் செத்தெம்பர் நடுப்பகுதியில் கையிருப்புக்களின் வெளியீடுகள் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டன.

மக்கள் சீனக் குடியரசு நவெம்பர் மாதத்தில் சிறு அளவில்கொள்வனவை மீண்டும் தொடங்கும் வரை, குறைந்த அக்கறையே காட்டியது. இது, நவெம் பரிலும் திசெம்பரிலும் விலைகளிற் சிறிதளவு திருத்தம் ஏற்படக் காரணமாயிற்று.

ஆய்வுக்குரிய ஆண்டில் இயற்கை இரப்பர் குறைந்தளவில் நுகர்ச்சி செய் யப்பட்டமைக்குரிய காரணங்கள், ஐ. அ. இரப்பர் கைத்தொழிலில் தொழி லாளர்களின் அமைதியற்ற தன்மை, ஐ. இ. இல் 'டன்லப்' வேலை நிறுத்தம், கொள்வனவு செய்யும் அக்கறை குறைந்தமை, புதிய கட்டளைகள் கிடைக் காமை என்பனவாகும்.

ஆர். எஸ். எஸ். தரம் 1இன் சீட் இரப்பரின் விலை இலண்டன் அங்காடி யில் இருத்தல் 20.3 பென்னியாக அமைந்து, 1969ஆம் ஆண்டின் தொடர் பான விலையுடன் ஒப்பிடுகையில் இருத்தலுக்கு 4.8 பென்னி அல்லது 15 சத வீதம் குறைந்து காணப்பட்டது. சிங்கப்பூர் அங்காடியில் சீட் இரப்பரின் ஆண்டுச் சராசரி க. ஏ. பெ. விலை இருத்தலுக்கு 55.91 ஸ்ரெயிட் $ சதங் களாக அமைந்து, முன்னைய ஆண்டினைவிட இருத்தலுக்கு 13.80 ஸ்ரெயிட் $ சதங்கள் விலை வீழ்ச்சியைக் காட்டியது.

அட்டவணை II (ஓ) 11 பன்னுட்டு இரப்பர் ஆய்வுக் குழுவினுல் வெளி யிடப்பட்ட, உலக நிரம்பல்கள், நுகர்ச்சி, இயற்கை இரப்பர், செயற்கை இரப்பர் என்பனவற்றின் இருப்புக்கள் ஆகியனவற்றின் 1970ஆம் ஆண்டின் தரவுகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

### அட்டவணை II (ஓ) 11

### இயற்கை, செயற்கை இரப்பர்களின் உலக நிரம்பல் நுகர்ச்சி கையிருப்புக்கள்

மெற்றிக் தொன்கள்.

| | இயற்கை | | செயற்கை | |
|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1969 | 1970 |
| நிரம்பல் (சன. – செத்.) ... | 2,100,000 | 2,140,000 | 3,384,000 | 3,652,750 |
| நுகர்ச்சி (சன. – செத்,) ... | 2,200,000 | 2,162,500 | 3,290,000 | 3,407,500 |
| கையிருப்பு1 ... | 885,000 | 965,000 | 872,500 | 1,070,000 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளிவிவரச் செய்தித்திரட்டு.

1. செத்தெம்பர் முடிவிலுள்ளபடி.

**இரப்பர் உற்பத்தியாளர் மாநாடு**

1970ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில் இந்தோனேசியா, இலங்கை, தாய்லாந்து, சிங்கப்பூர், தென் வியட்னும் ஆகிய நாட்கள் எல்லாம் இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் ஒரு சங்கமாகத் தங்களை அமைத்துக் கொண்டன, இதன் முதற்கூட்டம் கோலாலம்பூரில் 1970ஆம் ஆண்டு ஒற்றோபரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இரப்பர் உற்பத்தி நாடுகள் ஒவ்வொன்றிலும் விலைகளில் ஒருமைத் தன்மையையும் நிலையான தன்மையையும் கொண்டு வருவதற்காக ஓரிணைந்த சந்தை முறையை ஏற்படுத்த வேண்டுமென்று மலேசியா கொண்டுவந்த முன்மொழிதல் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தெங்கு உற்பத்திகள்**

உலகச் சந்தையில் உண்ணக்கூடிய எண்ணெய், கொழுப்பு என்பவற்றுக்குரிய கேள்வி அதிகரித்தமையும், நிரம்பல் தட்டுப்பாட்டினையும் தொடர்ந்து அவற்றின் 1970ஆம் ஆண்டுச் சராசரி விலைகள் 1969ஆம் ஆண்டு மட்டத்தினைவிட அதிகமாக உயர்ந்தன. லோறிக் எண்ணெயின் விலைகள் பிலிப்பைன்சு தென்னந்தோட்டங்களில் புயலினுலேற்பட்ட சேதத்தின் காரணமாக உற்பத்தியை அதிகரிக்க முடியாமல்போனமையால் பாதிக்கப்பட்டு ஆண்டு இறுதிப் பகுதியின் விலை உயர்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

**கொழும்பு அங்காடி**

கொழும்பு அங்காடியில் தெங்குப் பொருட்களின் மூன்று முக்கிய உற்பத்திகளினதும் விலைகள் 1970ஆம் ஆண்டில் உலகச் சந்தைப் போக்கினைப் பின்பற்றிச் சென்றன. 1970ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் கொப்பரா, தேங்காயெண்ணெய் என்பவற்றின் சராசரி விலைகள் 1969ஆம் ஆண்டு விலைகளுடன் ஒப்பிடுமிடத்து ஒரு பொதுவான வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தன; எனினும் தேங்காய்த் துருவலின் விலை முதலிரு மாதங்களில் மட்டுமே வீழ்ச்சியடைந்தது. பிலிப்பைன்சில் செய்யப்பட்ட செலாவணிச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து மாச்ச, ஏப்பிறல் மாதங்களில் கொப்பரா விலையும் அதிகரித்தது. 1970ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் கொப்பரா, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல் என்பனவற்றின் விலைகள் 1969ஆம் ஆண்டினதை விடக் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைப் பதிவுசெய்தன.

**கொப்பரா**

1969ஆம் ஆண்டு நவெம்பரில், மிகவும் தாழ்ந்த மட்டத்தினை அடைந்த விலைகளில் தூண்டுதல்களை ஏற்படுத்தும் நோக்குடன் கொப்பரா ஏலத்தில் பங்குபற்றிய பொருட் கொள்வனவுத் திணைக்களம் 1970ஆம் ஆண்டு மே மாதம் வரை தொடர்ந்து ஏலங்களில் பங்குபற்றியது. 1970 மேயில் கொப்பராவின் சராசரி விலை கண்டியொன்று ரூ. 235.49 இலிருந்து ஒற்றோபர் வரை குறைந்து சென்ற விலையான 1970 திசெம்பரில் ஏற்பட்ட திருந்திய கேள்வியினுல் கண்டியொன்றுக்கு ரூ. 251 36 ஆக அமைந்தது. 1970ஆம் ஆண்டில் கண்டியொன்று ரூ. 247.56 ஆக விளங்கிய கொப்பராவின் கொழும்புச் சந்தையின் ஆண்டுச் சராசரி விலை 1969ஆம் ஆண்டின் தொடர்பான விலையுடன் ஒப்பிடுகையில் கண்டிக்கு ரூ. 9.69 சதம் அல்லது 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

இலங்கைத் தெங்குச் சபையினுல் 1970ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட கொப்பராவின் மொத்தத் தொகை 4,42,263 கண்டிகள் (110.6 ஆயிரம் தொன்கள்) ஆக இருந்ததிற்கு எதிராக முந்திய ஆண்டில் விற்பனை 5,30,462 கண்டிகள் (132.6 ஆயிரம் தொன்கள்) ஆக அமைந்தது.

**தேங்காயெண்ணெய்**

1970ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் தேங்காய் எண்ணெயின் கொழும்பு அங்காடிச் சராசரி விலையின் வீழ்ச்சிப் போக்கானது 1970 யூனில் தொன்னொன்று ரூ. 1,369.25 சதவிலையை அடைந்தது. ஏழாண்டுகளுக்குப் பின்னர் இலங்கைத் தேங்காயெண்ணெய் அங்காடியில் இந்தியா நுழைந்தமையால் அங்காடியில் செத்தெம்பர் மாதமளவில் ஓர் உயர்ச்சித்தன்மை காணப்பட்டது. தேங்காயெண்ணெயின் ஆண்டுச் சராசரி விலை தொன்னுக்கு ரூ. 1,503.71 ஆக அமைந்து முன்னைய ஆண்டின் விலையைவிட தொன்னொன்றுக்கு ரூ. 49.24 அல்லது 3 சதவீத மெச்சத்தக்க அளவு அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

**தேங்காய்த் துருவல்**

1970ஆம் ஆண்டு சனவரி மாதந்தொடக்கம் வர்த்தக வியாபார அமைச்சு தேங்காய்த் துருவலுக்கு ஒரு குறைந்தளவு விலைத் திட்டத்தைக் கொண்டு வந்தது; இதன் முக்கிய நோக்கம் இலங்கையில் உள்ள தேங்காய்த் துருவல் உற்பத்தியாளர்களுக்கு ஒரு நியாயமான விலையை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். தொடக்கத்தில் தேங்காய்த் துருவலின் விலை, தேங்காய்த் துருவல் ஆலைச் சொந்தக்காரர்கள், கப்பலேற்றுவோர், இலங்கைத் தெங்குச் சபை, ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்பு பண்டக் கொள்வனவு ஆணையாளரால் இருத்தல் ரூ. 0.75 சதமாகக் குறிக்கப்பட்டது. எனினும் இந்தக் ''குறைந்தளவு விலைத்'' திட்டம் 1970ஆம் ஆண்டு மே மாதம் 3ஆந் திகதி தொட்டு இலங்கைத் தெங்குச் சபையினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இன்னுமொரு திட்டமான, கப்பலேற்றுவோர், தேங்காய்த் துருவல் ஆலையாளர் என்போரால் கொடுக்கப்படவேண்டிய விலையை வெளியிடும் ஒரு முறையை ஏற்படுத்தியதன் விளைவாகக் கைவிடப்பட்டது.

1970ஆம் ஆண்டு மே மாதத்தில் இருத்தலுக்கு ரூ. 0.59 ஆக விளங்கிய தேங்காய்த் துருவலின் சராசரி விலை 1970 திசெம்பரில் இருத்தலுக்கு ரூ 0.66 சதமாக அதிகரித்தது. ஆண்டுச் சராசரி விலையான இருத்தலுக்கு ரூ. 0.64, முன்னைய ஆண்டின் தொடர்பான விலையைவிட இருத்தலுக்கு 6 சதம் அல்லது 10 சதவீதம் அதிகரிப்பைக் காட்டியது.

**ஏற்றுமதிகள்**

1970ஆம் ஆண்டின் மூன்று முக்கிய தெங்கு உற்பத்தியாளரினதும் மொத்த ஏற்றுமதி அளவு (மத்திய வங்கி வர்த்தகக் குறிகாட்டிகளால் அளவிடப்பட்டதுபோல 1967=100) 1969ஆம் ஆண்டிற் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியான 18சதவீதத்துடன் ஒப்பிடும்போது3சதவீதத்தால் குறைந்துஇருந்தது. அவர்களது தேங்காய்க்குச் சமமான பெறுமானங்களின்படி, 1969ஆம் ஆண்டில் 8,960 இலட்சம் தேங்காய்கள் ஏற்றுமதி செய்தவிடத்து, 1970ஆம் ஆண்டில் 8,740 இலட்சம் தேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. கொப்பராவினதும், தேங்காய்த் துருவலினதும் ஏற்றுமதி அளவு முறையே 20 சதவீதத்தாலும் 5 சதவீதத்தாலும் குறைந்தவிடத்து, தேங்காயெண்ணெயின் ஏற்றுமதி அளவு முன்னைய ஆண்டினைவிட 30 ஆயிரம் அந்தர்களால் அல்லது 3.5 சதவீதத்தால் அதிகரித்தது. மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதிகளிலேற்பட்ட வீழ்ச்சி, 1970ஆம் ஆண்டின் மூன்று தெங்கு உற்பத்திகளின் சராசரி க. ஏ. பெ. விலைகளிற் பதிவுசெய்யப்பட்ட கணிசமான அளவு அதிகரிப்பின் பெருமளவுக்கு ஈடுசெய்யப்பட்டது.

இதன் விளைவாக மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளினதும் மொத்த ஏற்றுமதி வருமானங்கள் ரூ. 2,370 இலட்சமாக அமைந்து 1969ஆம் ஆண்டினைவிட 7 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன.

அட்டவணை II (ஒ) 12 மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளின் 1966 — 1970ஆம் ஆண்டுகட்.குரிய ஏற்றுமதி அளவுகள், ஏற்றுமதி விலைகள் தொடர்பான தரவுகளைக் காட்டுகின்றது.

### அட்டவணை II (ஒ) 12

**முக்கிய தெங்கு உற்பத்திகள் — ஏற்றுமதிகள்; அளவும், விலைகளும்**
**1966—1970**

| | அளவு | | | | க. எ. பெ. விலைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேங்காய் எண்ணெய் ஆயிரம் அந்தர் | கொப்பரா ஆயிரம் அந்தர் | தேங்காய்த் துருவல் | (மொத்தம் தேங்காய்க்குச் சமமான பெறுமானங்களின்படி ப. இ. தேங்காய்கள் | தேங்காயெண்ணெய் தொன்னொன்றுக்கு ரூபா | கொப்பரா கண்டிக்கு ரூபா | தேங்காய்த் துருவல் இறுத்தல் ரூ. ச. |
| 1966 | 1,457 | 417 | 930 | 1,071 | 1,489.00 | 294.60 | 0.60 |
| 1967 | 1,334 | 316 | 926 | 940 | 1,314 00 | 293.07 | 0 59 |
| 1968 | 1,261 | 425 | 1,382 | 1,096 | 2,108.80 | 396.25 | 1.06 |
| 1969 | 1,103 | 381 | 1,018 | 896 | 1,953.00 | 341.29 | 0.77 |
| 1970 | 1,142 | 305 | 967 | 874 | 2,037.60 | 371.90 | 0.91 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளிவிவரங்கள்.

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்**

கொப்பரா

கடந்த சிலவாண்டுகளாக இலங்கைக் கொப்பராவின் முக்கிய கொள்வனவாளராக விளங்கிய இந்தியா, 1969ஆம் ஆண்டின் 59 சதவீதத்துக்கு எதிராக 1970ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதியில் 64 சதவீத இறக்குமதி செய்தது. இலங்கைக் கொப்பராவின் இரண்டாவது பெரிய இறக்குமதி நாடாகிய பாக்கிஸ்தான், 1970ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த அளவில் 27 சதவீதம் அல்லது 82 ஆயிரம் அந்தரைக் கொள்வனவு செய்தது. ஐ. சோ. ச. குடியரசுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 20 ஆயிரம் அந்தர் கொப்பரா, 1969ஆம் ஆண்டில் இந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்த அளவுடன் ஒப்பிடும்போது 58 ஆயிரம் அந்தர் அல்லது 74 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

தேங்காயெண்ணெய்

ஐ. சோ. ச. குடியரசு, இலங்கை 1970ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்த மொத்த அளவில் 255 ஆயிரம் அந்தரை அல்லது 22 சதவீத்தைக் கொள்வனவு செய்து இலங்கையில் பெரிய கொள்வனவாளராக விளங்கியது. மக்கள் சீனக் குடியரசு 1969ஆம் ஆண்டின் 274 ஆயிரம் அந்தர் அல்லது 25 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 205 ஆயிரம் அந்தர் அல்லது18 சதவீதத்தைக் கொள்வனவு செய்தது. இலங்கைத் தேங்காயெண்ணெயில் அடுத்த முக்கிய கொள்வனவாளர்களாக 1970ஆம் ஆண்டில் பாக்கிஸ்தான், சேர்மன் சனநாயகக் குடியரசு, இத்தாலி ஆகிய நாடுகள் விளங்கின.

தேங்காய்துருவல்

1969ஆம் ஆண்டில் இலங்கையினது முக்கிய வாடிக்கை நாடான ஐக்கிய இராச்சியம், மொத்த ஏற்றுமதியில் 33 சதவீதம் அல்லது 332 ஆயிரம் தொன் தேங்காய்த் துருவலுக்கு எதிராக 36 சதவீதம் அல்லது 348 ஆயிரம் தொன்னைக் கொள்வனவு செய்தது. 1970ஆம் ஆண்டில் சேர்மன் சனநாய

## அட்டவணை II (ஏ) 13

### தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகள், ஏற்றுமதிப் பெறுமானங்கள், சராசரி க. ஏ. பெ. விலைகள்

| | தொகை கூறு | அளவு | | | | பெறுமதி (ப. இ. ரூ) | | | | சராசரி க. ஏ. பெ. விலை (கூறு ஒன்றுக்கு ரூபா) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1968 | 1969 | 1970 | 1969ஐ விட 1970இல் சதவீத மாற்றம் | 1968 | 1969 | 1970 | 1969ஐ விட 1970இல் சதவீத மாற்றம் | 1968 | 1969 | 1970 | 1969ஐ விட 1970இல் சதவீத மாற்றம் |
| **தெங்குப் பொருட்களின் தொகுதி** | | | | | | | | | | | | | |
| கயிற்று நார்–சிலிப்பான ... | ஆயி. அந். | 563.0 | 506.7 | 474.0 | — 6.5 | 25.6 | 24.6 | 22.3 | — 9.3 | 43.35 | 48.63 | 47.13 | — 3.1 |
| கயிற்று நார்–மெத்தை ... | ,, | 1065.0 | 1180.3 | 1172.6 | — 0.7 | 25.5 | 25.4 | 24.8 | — 2.4 | 20.23 | 21.67 | 21.16 | — 2 4 |
| தேங்காய் சிரட்டைக் கரி ... | ,, | 319.1 | 385.2 | 583.4 | + 51.5 | 5.2 | 3.4 | 6.7 | + 97.1 | 16.34 | 8.90 | 11.53 | + 29.6 |
| தேங்காய்கள் ... | ப. இ. காய். | 7.6 | 10.3 | 6.3 | — 38.8 | 3.3 | 4.2 | 2.9 | — 30.9 | 0.44 | 0.41 | 0.46 | + 12.2 |
| **வாசனைச் சரக்குகள்** | | | | | | | | | | | | | |
| கறுவாப்பட்டைச் சுருள் .. | ஆயி. அந். | 61.8 | 65.9 | 70.0 | + 6.2 | 32.9 | 33.8 | 28.4 | — 16.0 | 531.79 | 513.33 | 405.79 | — 20.9 |
| கறுவாப்பட்டைச் சுள்ளி ... | ,, | 16.6 | 21.6 | 12.7 | — 41.2 | 2.3 | 4.1 | 1.7 | — 58.5 | 141.30 | 191.11 | 134.02 | — 29.9 |
| மிளகு ... | ,, | 16 2 | 17.9 | 16.9 | — 5.6 | 2.4 | 3.1 | 4.7 | + 51 6 | 146.53 | 173.12 | 279.42 | + 61.4 |
| ஏல அரிசி ... | ,, | 2.5 | 3.2 | 4.0 | + 25.0 | 4.1 | 7.3 | 11.3 | + 54.8 | 16[illegible]9.22 | 2297.00 | 2838.61 | + 23 6 |
| இலவங்கம் ... | ,, | 1.0 | 4.6 | 5.5 | + 19.6 | 0.1 | 2.8 | 4.1 | + 46.4 | 130.22 | 617.35 | 756.41 | + 22.5 |
| **கனிப்பொருட் தொகுதி** | | | | | | | | | | | | | |
| இயற்கைக் காரீயம் ... | ,, | 212.6 | 224.8 | 192.6 | — 14.3 | 7.8 | 8.3 | 8.9 | + 7.2 | 36.91 | 36.78 | 46.39 | + 26.1 |
| இல்மனைற் .. | ,, | 1455 0 | 1667.2 | 1556.2 | — 6.7 | 2.6 | 4.1 | 4.2 | + 2.4 | 1.78 | 2.45 | 2.68 | + 9.4 |
| **ஏனைய விவசாயப் பொருட்கள்** | | | | | | | | | | | | | |
| கொக்கோ விதைகள் ... | ,, | 34.8 | 25.4 | 29.9 | + 17.7 | 7.3 | 7.0 | 7.2 | + 2.9 | 211.16 | 273.43 | 240.82 | — 11.9 |
| தயாரிக்கப்படாத புகையிலை ... | ப. இ. இரு. | 1.3 | 0.7 | 0.5 | — 28 6 | 5.1 | 2.9 | 2.2 | — 24.1 | 3.81 | 4.04 | 4.21 | + 4.2 |
| சிற்றனெல்லா எண்ணெய் ... | ஆயி. இரு. | 297.8 | 402.6 | 426.5 | + 5.9 | 1.2 | 1.8 | 1.9 | + 5.6 | 3.99 | 4.57 | 4.48 | — 2.0 |
| கறுவா இலை எண்ணெய் ... | ,, | 79.2 | 93.9 | 111.4 | + 18.6 | 0.8 | 1.0 | 1.1 | + 10.0 | 10.51 | 10.29 | 10.12 | — 1.7 |
| **கொழுப்புத் திராவகத் தொகுதி** | | | | | | | | | | | | | |
| கிளிசரோல் ... | ஆயி. அந். | 24.8 | — | — | — | 1.9 | — | — | — | 78.61 | — | — | — |
| கிளிசறின் ... | ,, | 21.0 | 21.5 | 24.6 | + 14.4 | 2.0 | 1.2 | 1.5 | + 25.0 | 93.16 | 57.20 | 59.20 | + 3.4 |
| **தயாரிக்கப்பட்ட பொருட்கள் தொகுதி** | | | | | | | | | | | | | |
| மெருகூட்டப்பட்ட தோல ... | ,, | 10.1 | 11.6 | 13.3 | + 14.7 | 1.8 | 3.2 | 3.6 | + 12.5 | 180.02 | 275.76 | 269.78 | — 2.2 |
| ஆட்டுத் தோல் ... | ,, | 3.3 | 0.4 | ... | ... | 1.1 | 0.2 | ... | ... | 338.23 | 397.97 | — | — |
| பெறுமதியுள்ளதும், ஓரளவு பெறுமதியுள்ளதுமான கற்கள் ... | ஆயி. கரெட். | 196.0 | 136.6 | 184.9 | + 35.4 | 2.0 | 0.5 | 4.3 | +760.0 | — | — | — | — |
| ஆபரணங்களும், பொற்கொல்லர்களின் பொருட்களும் ... | — | — | — | — | — | 1.2 | 1.0 | 1.0 | ... | — | — | — | — |
| உடைகளும், ஆடைகளும் ... | ஆயி. டசி. | 32.3 | 110.3 | 180.4 | + 63.6 | 4.2 | 3.3 | 7.8 | +136.4 | — | — | — | — |
| இரப்பர் தோலிலான காலணிகள் ... | ,, | 10.4 | 29.0 | 31.8 | + 9.7 | 0.3 | 1.5 | 1.0 | | | | | |
| மேற்காணும் பொருட்களின மொத்தப் | | | | | | | | | — 33.3 | 28 78 | 53.38 | 30.62 | — 42.6 |
| பெறுமதி ... | | | | | | 140.7 | 144.7 | 151.6 | + 4.8 | | | | |
| சிறு ஏற்றுமதிப் பொருட்களினது | | | | | | 152.2 | 161.2 | 198.5 | | | | | |
| மொத்தப் பெறுமதி ... | | | | | | | | | + 23.1 | | | | |
| உள்ளடக்கப்படடதன் சதவீதம் ... | | | | | | 92.4 | 89.8 | 76.4 | | | | | |

மூலம்; இலங்கை மத்திய வங்கி

கக் குடியரசுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட தேங்காய்த் துருவல் 109 ஆயிரம் அந்தர்களாக அமைந்து முன்னைய ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய்த்துருவலுடன் ஒப்பிடுகையில் 19 ஆயிரம் அந்தர் அல்லது 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. 1970ஆம் ஆண்டின் மொத்தத் தேங்காய்த் துருவல் ஏற்றுமதியில், சேர்மன் சனநாயகக் குடியரசு, நெதர்லாந்து, தென்னுபிரிக்கக் குடியரசு, ஆகிய நாடுகள் முறையே 75 ஆயிரம் அந்தர், 67 ஆயிரம் அந்தர், 42 ஆயிரம் அந்தர் தேங்காய்த் துருவலைக் கொள்வனவு செய்தன.

**ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள்**

1970ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகளின் பெறுமானம் ரூ. 1,980 இலட்சமாக அமைந்து 1969ஆம் ஆண்டின் ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் ரூ. 370 இலட்சம் அல்லது 23 சதவீதம் கணிசமான அளவு அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தது. ஏற்றுமதி வருமானங்களிலேற்பட்ட அதிகரிப்பு முற்ருக இவ்வுற்பத்திகளின் ஏற்றுமதிகளிலேற்பட்ட 3 சதவீத விரிவின் விளைவாகும். இவ்விளைவு இவற்றின் சராசரி ஏற்றுமதி விலைகளிலேற்பட்ட 2 சதவீத வீழ்ச்சியை ஓரளவு ஈடுசெய்தது. (வங்கிக் குறிகாட்டிகள்) ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த உயர்ந்த வருமானங்கட்கு, 1968 மே மாதத்தில் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்துவந்தமை, பெருமளவுக்குக் காரணமாக அமைந்தது எனலாம். மேலதிகக் கொடுப்பனவு வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தின் ரூபாப் பெறுமானத்தில் 55 சதவீதமாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. பெற்ருேலியத் தூய்மிப் பொறியின் பக்க உற்பத்தியினதும், உர உற்பற்பத்தியில் பயன்படுத்தப்படுவதுமான நாப்தா எனும் பொருள் யப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டமை, ரூ 90 இலட்சம் வருமானத்தைக் கொடுத்து, 1970ஆம் ஆண்டில் உள்நாட்டு ஏற்றுமதி வருமானங்கள் உயர்ந்த மட்டத்தை அடையப் பெருமளவுக்குக் காரணமாக அமைந்தது. இயற்கையான காரீயத்தை ஏற்றுமதி செய்தவர்களுக்குக் கிடைக்கும் பெரிய இலாபங்களின் பெரும் பகுதியினை அகற்றும் நோக்குடன் முன்பு நடைமுறையிலிருந்த உண்மையான க. ஏ. பெ. கொழும்புப் பெறுமதியில் 25 சதவீதமாக இருந்த ஏற்றுமதித் தீர்வை 1970 ஒற்ருேபர் தொடக்கம் உண்மையான க. ஏ. பெ. கொழும்புப் பெறுமதியில் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது. 1969ஆம் ஆண்டறிக்கையிற் குறிப்பிட்டதுபோல் வெ. செ. உ. சா. திட்டம் வழங்கிய ஊக்கங்களிலிருந்து பெறப்படும் அதிகரித்த ஏற்றுமதிகளை நீண்டகாலப் பகுதியின் பின்னரே எதிர்பார்க்கலாம். இதுவுங்கூட, உற்பத்திக்குத் தடையாக உள்ள முட்டுக்கட்டைகளை நீக்கித் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதாலேயே ஏற்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதி அளவு, ஏற்றுமதிப் பெறுமதி, சராசரிக் க. ஏ. பெ. விலைகள் ஆகிய தரவுகளை அட்டவணை II (ஒ) 13 தருகின்றது.

1969ஆம் ஆண்டின் 90 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 1970இற் பதிவு செய்யப்பட்ட 'ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள்'' என்ற தொகுதியின் மொத்த ஏற்றுமதிகளில் 76 சதவீதத்தை அட்டவணை II (ஒ) 13 உள்ளடக்குகின்றது. 1970இல் உட்படுத்தப்பட்ட குறைந்த சதவீதத்துக்குப் பல் வேறு பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதிகள் 1969ஆம் ஆண்டின் ரூ. 16 இலட்சத்திலிருந்து 1970இல் ரூ. 207 இலட்சத்துக்கு அதிகரித்ததனுலாகும். இவ்விடயம் இவ்வாண்டில் இவ்வட்டவணையிலிருந்து தவிர்க்கப்பட்டது. அட்டவணை II (ஒ) 14 கொழும்பு அங்காடி விலை அசைவுகளைத் தருகின்றது.

## அட்டவணை II (ஒ) 14

### தெரிவுசெய்யப்பட்ட சிறு ஏற்றுமதிப் பொருட்களின் சராசரிக் கொழும்பு அங்காடி விலை

ஒரு கூறுக்கான ரூபாய்கள்

| விடயம் | அளவுக்கூறு | 1-ஆம் கால் | | | 2-ஆம் கால் | | | 3-ஆம் கால் | | | 4-ஆம் கால் | | | ஆண்டுச் சராசரி | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1968 | 1969 | 1970 | 1968 | 1969 | 1970 | 1968 | 1969 | 1970 | 1968 | 1969 | 1970 | 1968 | 1969 | 1970 | 1969 மேல் 1968 | 1970 மேல் 1969 |
| கொக்கோ1 .. | (அந்தர்) | 195.87 | 387.30 | 272.08 | 236.18 | 374.77 | 230.00 | 294.34 | 388.83 | 221.75 | 311.17 | 318.04 | 229.88 | 259.39 | 367.24 | 239.19 | + 41.58 | — 34.9 |
| கறுவாச் சுருள்2 ... | (இருத்தல்) | 4.71 | 6.00 | 4.95 | 5.05 | 5.43 | 4.74 | 5.03 | 5.32 | 4.39 | 5.42 | 5.30 | 4.26 | 5.05 | 5.51 | 4.58 | + 9.11 | -- 16 9 |
| கறுவாப் பட்டை 3 ... | (கண்டி) | 287.25 | 511.04 | 260.07 | 397.08 | 476.13 | 277.54 | 494.88 | 443.75 | 267.45 | 616.67 | 301.54 | 265.04 | 448.97 | 433.11 | 267.52 | — 3.53 | — 38.2 |
| எல அரிசி4 ... | (இருத்தல்) | 14.28 | 25.91 | 33.15 | 17.01 | 30.34 | 33.37 | 20.00 | 28.99 | 27.05 | 21.08 | 28.79 | 22.54 | 18.09 | 28.51 | 29.03 | + 57.60 | + 1.8 |
| சிற்றெல்லா எண்ணெய்5 | (இருத்தல்) | 3.07 | 6.05 | 5.79 | 3.74 | 7.07 | 5.77 | 4.65 | 5.85 | 6.13 | 5.48 | 6.30 | 6.42 | 4.23 | 6.31 | 6. 3 | + 49.17 | — 4.4 |
| பப்பாப்பால் வெள்ளை ... | (இருத்தல்) | 17.51 | 18.60 | 13.81 | 18.56 | 13.81 | 14.99 | 19.37 | 16.39 | 14.98 | 19.43 | 13.44 | 14.35 | 18.72 | 15.56 | 14.53 | — 16.88 | — 6.6 |
| பப்பாப்பால் மண்ணிறம் | (இருத்தல்) | 8.12 | 10.14 | 9.25 | 10.13 | 6.73 | 9.87 | 11.08 | 8.63 | 9.25 | 10.36 | 8.83 | 9.25 | 9.92 | 8.58 | 9.40 | — 13.51 | + 9.6 |
| தும்பு மெத்தை6 .. | (அந்தர்) | 11.68 | 20.71 | 16.30 | 14.36 | 20.05 | 16.50 | 19.25 | 17.20 | 16.50 | 21.34 | 15.41 | 18.21 | 16.66 | 18.34 | 16.88 | + 10.08 | — 8.0 |
| சிலிப்புத் தும்புகள்7 .. | (அந்தர்) | 30.71 | 47.63 | 38.65 | 36.75 | 47.11 | 38.00 | 44.31 | 42.59 | 37.47 | 49.64 | 40.00 | 38 00 | 40.35 | 44.33 | 38.03 | + 9.86 | — 14.2 |
| தேங்காய்8 ... | (ஆயிரம்) | 246.58 | 275.88 | 272.67 | 248.42 | 222.04 | 247.79 | 264.96 | 186.46 | 200.84 | 260 50 | 228.33 | 228.71 | 255.12 | 228.18 | 237.50 | — 10.56 | + 4.1 |
| தேங்காய்ச் சிரட்டைக் கரி9 | (தொன்) | 331.46 | 153.63 | 179.17 | 272.08 | 132.38 | 315.18 | 190.67 | 125.96 | 385.67 | 167.25 | 131.42 | 400.42 | 240.37 | 135.85 | 320.21 | — 43.48 | + 135.7 |

மூலங்கள்: வாராந்தச் சிறு உற்பத்திச் சந்தை அறிக்கைகள்,
இலங்கை வர்த்தகச் சபை – வாராந்த விலை நிரல்.

1. பெருந்தோட்டம் 1-ஆம் தரம்
2. திறமான /0000
3. வாங்குவோர் களஞ்சியங்களில் சில்லறையாக, மண்
4. பச்சைப் பெருந்தோட்டம் 1-ஆம் தரம்
5. முந்திய விற்பனை
6. தரம் 1
7. 3 கைப்பிடி அளவான
8. நடுத்தரம்
9. வாங்குவோர் சரக்குகளில்

சிக்கனமற்ற தேயிலை, இரப்பர், நிலையங்களில் வேறு பயிர்களை நடுவதற்கான திட்டத்தை உள்ளடக்கிய தேயிலை இரப்பர் மானியச் சட்டங்களின் கீழான பயிர் பன்முகப்படுத்தல் மானியத் திட்டம் 1970 யூனிற் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சிக்கனமற்ற தேயிலை இரப்பர் நிலங்களிற் தென்னை கொக்கோ, மேச்சற் புல், மரம், ஏல அரிசி, மிளகு, மரம் சாதிக்காய், கராம்பு, பாசன் பழம், அன்னுசி, புகையிலை, எண்ணெய் தரும் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட ஏக்கர் ஆளவுக்குப் பயிரிடுபவர்களுக்கு ஒவ்வொரு ஏக்கருக்கும் வேறுபடும் விதங்களிலான மானியம்1 வழங்கப்படும்.

இம்மானியங்கள். பயிரிடுபவர்கட்குத் தவணைக் கட்டணங்களில் வழங்கப்படும் நேரடி நன்கொடைகளாகும். இத்துடன் இலங்கை அரசு ஈட்டு வங்கியில் இருந்து பெறப்படும் கடன்களின் மூலம் மேற்கூறிய செலவுக்கு உறுதுணையாக இருப்பதற்குரிய ஒரு திட்டமும் நடைமுறையில் உள்ளது.

---

1. சிக்கனமற்ற தேயிலை, இரப்பர் நிலையங்களில் பயிர் பன்முகப்படுத்தப்படும் மானியத் திட்டம் பற்றிய விவரங்களைப் பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

| பயிர்கள் | ஏக்கருக்கு மானியம் (தவணையின்படி) | பயிரிடுதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆகக்குறைந்த ஏக்கர் | பொதுத் தகுதியான மாவட்டங்கள் |
|---|---|---|---|
| தென்னை ... | ரூ. 800/- | 1 ஏக்கர் | கொழும்பு, கண்டி, மாத்தளை, காலி, குருநாகல், மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, பதுளை, மொனறாகலை. |
| கொக்கோ ... | ரூ. 1,200/- | 1 ஏக்கர் | கண்டி, மாத்தளை, குருநாகல், மொனறாகலை, கேகாலை, பதுளை. |
| கால்நடைத் தீவனம் ... | ரூ. 500/- | 2 ஏக்கர்கள் | கொழும்பு, கண்டி, நுவரேலியா, குருநாகல், பதுளை. |
| மரம் ... | ரூ. 600/- | 5 ஏக்கர்கள் | இரத்தினபுரி, கொழும்பு, கேகாலை, கண்டி, மாத்தளை, நுவரேலியா, பதுளை. |
| ஏல அரிசி, மிளகு ... | ரூ. 900/- ஒன்றுக்கு | ½ ஏக்கர் | மண், சுவாத்திய அடிப்படையில் அமைய (கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, நுவரேலியா, குருநாகல்.) |
| சாதிக்காய், கராம்பு ... | ரூ. 800/- ஒன்றுக்கு | ½ ஏக்கர் | |
| பாசன் பழமும், அன்னுசியும் | ரூ. 1000/- ஒன்றுக்கு | | |
| எண்ணெய் தரும் மரம் ... | ரூ. 1500/- ஒன்றுக்கு | | |
| புகையிலை ... | ரூ. 500/- | | மாத்தளை, கண்டி, தும்பறாபள்ளத்தாக்கு, நுவரேலியா, பதுளை, மொனறாகலை. |
| ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பயிர்கள் ... | ரூ. 500/- | | |

மூலம்: தேயிலை, இரப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

## 3. இறக்குமதிகள்[1]

முன்னர் குறிப்பிட்டதுபோல் 1970ஆம் ஆண்டின் இறக்குமதிகளிலேற்பட்ட ரூ. 2,230 இலட்சங்கொண்ட கணிசமான அளவு வீழ்ச்சி (சுங்கப் பகுதியின் தரவு) உணவு ஆணையாளரின் இறக்குமதிகளிற் காணப்பட்ட மேலதிக மதிப்பீட்டைச் சரிசெய்தவிடத்து ரூ. 2,040 இலட்சமாகக் குறைந்தது.

அட்டவணை II (ஒ) 15 உணவுஆணையாளரின் அரிசி, கோதுமை மா, சீனி என்பவற்றின் இறக்குமதிகட்கேற்பச் சுங்கப் பகுதியின் தரவுகள் சரிசெய்யப்பட்டபின் உள்ள நிலையைக் காட்டும்.

### அட்டவணை II (ஒ) 15

### உணவு ஆணையாளரின் இறக்குமதிகளுக்குச் சீராக்கஞ் செய்யப்பட்ட சுங்கப் பகுதியின் தரவுகள்

| | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | |
|---|---|---|
| | 1969 | 1970 |
| 1. நுகர்வுப் பொருட்களில் ... | 1,174 | 1,276 |
| அ. உணவும் பானமும் ... | 932 | 1,051 |
| (i) அரிசி .. | 211 | 353 |
| (ii) கோதுமை மா ... | 230 | 225 |
| (iii) சீனி, சுத்திகரிக்கப்பட்ட ... | 142 | 152 |
| ஆ. ஆடைகள் ... | 122 | 124 |
| இ. ஏனைய நுகர்வுப் பொருட்கள் ... | 120 | 101 |
| 2. நடுத்தரப் பொருட்கள் ... | 592 | 451 |
| 3. முதலீட்டப் பொருட்கள் ... | 700 | 546 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள் ... | 33 | 22 |
| 5. மொத்த இறக்குமதிகள் ... | 2,499 | 2,295 |

1970ஆம் ஆண்டில் உணவு ஆணையாளரின் அரிசி, கோதுமை மா, சீனி என்பவற்றின் உண்மையான மொத்த இறக்குமதிகள் ரூ. 7,300 இலட்சமாக அமைந்து கூர்மையாக அதிகரித்தமையால் 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து வெளிநாட்டுச் செலாவணியில் ரூ. 1,470 இலட்சம் அதிகரித்தது. இவரது இறக்குமதிகள் அரிசி ரூ. 3,530 இலட்சமாகவும், சீனி ரூ. 1,520 இலட்சமாகவும் அமைந்து முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளைவிட முறையே ரூ. 1,420 இலட்சம், ரூ. 100 இலட்சம் அதிகரித்துக் காணப்பட்ட கோதுமைமாவின் இறக்குமதிப் பெறுமதிகள் ரூ. 2,250 இலட்சமாக அமைந்து ரூ. 50 இலட்சம் வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

அட்டவணை II (ஒ) 16, 1969ஆம் 1970ஆம் ஆண்டுகளில் உணவு ஆணையாளரும், சுங்கப்பகுதியும் பதிவுசெய்த அரிசி, கோதுமை மா, சீனி இறக்குமதிகளின் அளவுகள், பெறுமதிகள், சராசரி, கொ. க. விலைகள் என்பவற்றைக் காட்டுகிறது.

1. 1969சனவரியிலிருந்து இறக்குமதிப் புள்ளிவிவரங்கள் புருசெல்சு இறுப்புப் பெயரேட்டின்படி தொகுக்கப்படுகின்றன. எனினும், முன்னைய ஆண்டுகளுடன் தரவுகள் ஒப்பிடுவதற்கு வசதியாக பு. இ. பெ. புள்ளிவிவரங்கள் அதற்கியைந்த த. ச. கு. பா. புள்ளிவிவரங்களுக்குப் பொருந்தும்படியாக மறுபாகுபாடு செய்யப்பட்டுள்ளன. பிழைகள் ஏதாவது காணப்படினும் அவை சிறிதாகவிருக்கும்.

## அட்டவணை II (ஒ) 16

### அரிசி, கோதுமை மா, சீனி
### என்பவற்றின் சுங்கப்பதிவேடுகளும், உண்மை இறக்குமதிகளும்

| | உணவு ஆணையாளரின் தரவு | | | | சுங்கப்பகுதியின் தரவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | மாற்றம் | | 1969 | 1970 | மாற்றம் | |
| | | | முழுவதும் | % | | | முழுவதும் | % |
| **அரிசி** | | | | | | | | |
| அளவு : ஆயிரம் தொன்கள்.. | 260 | 526 | +266 | +102.3 | 304 | 472 | +168 | +55.3 |
| பெறுமதி: ப. இ. ரூபாய்கள் ... | 211 | 353 | +142 | + 67.3 | 257 | 318 | + 61 | +23.7 |
| கொ.கா. விலை ஒரு தொன்னுக்கு ரூபா ... | 811.18 | 671.15 | —140.03 | — 17.3 | 846.51 | 672.70 | —173.81 | —20.5 |
| **கோதுமை மா** | | | | | | | | |
| அளவு : ஆயிரம் தொன்கள்... | 388 | 369 | — 19 | — 4.9 | 409 | 419 | + 10 | + 2.4 |
| பெறுமதி: ப. இ. ரூபாய்கள் ... | 230 | 225 | — 5 | — 2.2 | 255 | 260 | + 5 | + 2.0 |
| கொ.கா. விலை ஒரு தொன்னுக்கு ரூபா ... | 591.94 | 611.44 | + 19.50 | + 3.3 | 624.38 | 621.48 | — 2.90 | — 0.5 |
| **சீனி** | | | | | | | | |
| அளவு : ஆயிரம் தொன்கள் . | 308 | 240 | — 68 | — 22.1 | 265 | 279 | + 14 | + 5.3 |
| பெறுமதி: ப. இ. ரூபாய்கள் ... | 142 | 152 | + 10 | + 7.0 | 115 | 170 | + 55 | +47.8 |
| கொ.கா. விலை ஒரு தொன்னுக்கு ரூபா ... | 459.93 | 633.71 | +173.78 | + 37.8 | 436.02 | 608.46 | +172.44 | +39.5 |
| அரிசி கோதுமை மா, சீனி என்பனவற்றின் மொத்தப் பெறுமதி: ப. இ. ரூபாய்களில் .. | 583 | 730 | +147 | + 25.2 | 627 | 748 | +121 | +19.3 |

மூலங்கள் : உணவு ஆணையாளரின் திணைக்களம்,
இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

**அரிசி**

அரிசி இறக்குமதிகளின் பெறுமதிகளிலேற்பட்ட கூர்மையான அதிகரிப்பும், அதனைத் தொடர்ந்து 1970ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் செலவின் அதிகரிப்பும், இறக்குமதி அளவிலேற்பட்ட 266 ஆயிரம் தொன்கள் அல்லது 102 சதவீதம் கூர்மையான அதிகரிப்பின் விளைவேயாகும். இவ்விளைவு, சராசரி கொ. கா. க. விலையிலேற்பட்ட தொன்னுக்கு ரூ. 140 கொண்ட வீழ்ச்சியால் ஓரளவுக்கு ஈடுசெய்யப்பட்டது. ஆய்வுக்குரிய ஆண்டில் அரிசி, இறக்குமதியின் அளவு இரு மடங்காக்கப்பட்டமைக்குரிய முக்கிய காரணம், அரசாங்கம், நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வந்த வாராந்த உதவிப் பங்கீட்டளவு அரிசியை இரு மடங்காக அதிகரிக்க முடிவுசெய்தமையாகும். அரிசியின் சராசரிக் கொ. கா. விலைகளிலேற்பட்ட வீழ்ச்சி, உலகச் சந்தைகளில் நிலவிய குறைந்த விலைபோக்குகளுக்கு ஏற்ப அமைந்ததுடன், உற்பத்தி செய்யும் நாடுகளிற் காணப்பட்ட நல்ல அறுவடையினதும் அதனைத் தொடர்ந்து நிரம்பல்களிலேற்பட்ட அதிகரிப்பினதும் விளைவாகவும் ஏற்பட்டது.

**கோதுமை மா**

கோதுமை மா இறக்குமதிகளிலேற்பட்ட ரூ. 50 இலட்சங்கொண்ட வீழ்ச்சிக்குரிய காரணம், இறக்குமதி செய்யப்பட்ட அளவிலேற்பட்ட 19 ஆயிரம் தொன்கள் அல்லது 5 சதவீதச் சுருக்கமேயாகும். இதன் விளைவு சராசரிக் கொ. கா. விலைகளிலேற்பட்ட தொன்னுக்கு ரூ. 20 கொண்ட அதிகரிப்பினால் ஈடுசெய்யப்பட்டது கோதுமை மாவின் சராசரி கொ. க. விலையிலேற்பட்ட அதிகரிப்பு கோதுமை உற்பத்தி செய்யும் நாடுகள் பலவற்றிலேற்பட்ட உற்பத்திக் குறைவினாலும், கப்பற் கட்டணங்கள் அதிகரித்தமையினாலும் ஏற்பட்டதாகும்.

# அட்டவணை II (ஒ) 17

## தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகள், ஏற்றுமதிப் பெறுமானங்கள், சராசரி க ஏ.பெ. விலைகள்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 |
| **1. நுகர்ச்சிப் பொருட்கள் ... ... ...** | 1,161 | 931 | 1,147 | 1,218 | 1,294 | 57.2 | 53.6 | 52.8 | 47.9 | 55.9 |
| இவற்றில் | | | | | | | | | | |
| அ. உணவும், குடிவகையும் ... ... ... | 956 | 783 | 989 | 976 | 1,069 | 47.1 | 45.1 | 45.5 | 38.0 | 46.2 |
| (i) அரிசி ... ... ... | 367 | 211 | 341 | 257 | 318 | 18.1 | 12.1 | 15.7 | 10.1 | 13.7 |
| (ii) கோதுமை மா ... ... ... | 113 | 229 | 250 | 255 | 260 | 5.6 | 13.2 | 11.5 | 10.0 | 11 2 |
| (iii) (அ) தூய்மையாக்கப்பட்ட சீனி ... ... | 103 | 74 | 97 | 115 | 170 | 5.1 | 4.3 | 4.5 | 4.5 | 7.3 |
| (ஆ) சீனி, ஏனைய (சர்க்கரை, பனங்கட்டி, கற்கண்டு) ... | 2 | ... | ... | ... | 1 | 0.1 | ... | ... | ... | ... |
| (iv) பாலும், பாற்பொருட்களும் ... ... | 77 | 66 | 74 | 52 | 55 | 3.8 | 3.8 | 3.4 | 2.0 | 2.4 |
| (v) இறைச்சி, மீன், முட்டைகள் ... ... | 101 | 56 | 70 | 87 | 68 | 5.0 | 3.2 | 3.2 | 3.4 | 2.9 |
| இவற்றில் (அ) கருவாடு (மாலைதீவுக் கருவாடு தவிர இறுல், கருவாடு உட்பட) ... | 75 | 44 | 58 | 69 | 53 | 3.7 | 2.5 | 2.7 | 2.7 | 2.3 |
| (ஆ) ஏனைய மீன்கள் ... ... | 19 | 9 | 11 | 17 | 15 | 0.9 | 0.5 | 0.5 | 0.7 | 0.6 |
| (இ) இறைச்சியும், இறைச்சித் தயாரிப்புக்களும் | 4 | 3 | 1 | 1 | ... | 0.2 | 0.2 | ... | ... | ... |
| (ஈ) முட்டைகள் ... ... | — | — | — | — | — | — | — | — | — | — |
| vi) ஏனைய உணவு ... ... ... | 170 | 126 | 125 | 145 | 139 | 8.4 | 7.2 | 5.8 | 5.7 | 6.0 |
| இவற்றில் (அ) உருளைக் கிழங்கு ... ... | 24 | 7 | ... | — | ... | 1.2 | 0.4 | ... | — | ... |
| (ஆ) கடலையும், பருப்பு வகைகளும் .. | 64 | 53 | 56 | 78 | 63 | 3.1 | 3.0 | 2.6 | 3.1 | 2.7 |
| (இ) வெங்காயம் ... ... | 20 | 19 | 17 | 17 | 29 | 1.0 | 1.1 | 0.8 | 0.7 | 1.3 |
| (ஈ) மிளகாய் ... ... | 43 | 29 | 34 | 26 | 26 | 2.0 | 1.7 | 1.6 | 1.0 | 1.1 |
| (vii) குடிவகைகளும், தயாரிக்கப்பட்ட புகையிலையும் ... | 2 | 2 | 2 | 4 | 3 | 0.1 | 0.1 | 0.1 | 0.2 | 0.1 |
| ஆ. ஆடைவகைகள் (உடைகள் உட்பட) ... ... | 119 | 73 | 77 | 122 | 124 | 5.9 | 4 2 | 3.5 | 4.8 | 5.3 |
| இ. ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் ... ... | 86 | 75 | 81 | 120 | 101 | 4.2 | 4.3 | 3.7 | 4.7 | 4.4 |
| இவற்றில் (i) மோட்டார் வண்டிகள் ... ... | 3 | 10 | 7 | 13 | 10 | 0.1 | 0.6 | 0.3 | 0.5 | 0.4 |
| (ii) கடிகாரங்களும், மணிக்கூடுகளும் .. ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| (iii) வானொலிப் பெட்டிகள் ... ... | ... | ... | 3 | 1 | 1 | 1 | ... | 0.1 | ... | ... |
| (iv) இரப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் ... ... | 5 | 4 | 3 | 22 | 11 | 0.2 | 0.2 | 0.1 | 0.9 | 0.5 |
| (v) மருந்துகளும், மருந்துப் பொருட்களும் ... | 35 | 22 | 23 | 32 | 29 | 1.7 | 1.3 | 1.1 | 1.3 | 1.3 |
| **2. நடுத்தரப் பொருட்கள் ... ... ...** | 470 | 441 | 629 | 592 | 451 | 23.2 | 25.4 | 29.0 | 23.3 | 19.5 |
| இவற்றில் (i) உர வகைகள் .. ... ... | 91 | 80 | 110 | 66 | 81 | 4.5 | 4.6 | 5.1 | 2.6 | 3.5 |
| (ii) பெற்றோலிய உற்பத்திகள் ... ... | 130 | 112 | 196 | 156 | 58 | 6.4 | 6.4 | 9.0 | 6.1 | 2.5 |
| (iii) நிலக்கரி ... ... ... | 3 | 9 | 4 | 4 | 4 | 0.1 | 0.5 | 0.1 | 0.2 | 0.2 |
| (iv) இரசாயனப் பொருட்களும், கலவைகளும் ... | 36 | 38 | 45 | 66 | 56 | 1.8 | 2.2 | 2.1 | 2.6 | 2.4 |
| (v) சாயப் பொருட்களும், தோல் பதனீட்டுப் பொருட் களும், வர்ணமூட்டும் பொருட்களும் ... | 13 | 10 | 15 | 14 | 10 | 0.6 | 0.6 | 0.7 | 0.6 | 0.4 |
| (vi) தேயிலையும், ஏனைய பெட்டிகளும் ... ... | 18 | 9 | 10 | 13 | 9 | 0.9 | 0.6 | 0.5 | 0.5 | 0.4 |
| (vii) தாளும், தாள் மட்டைகளும் ... ... | 50 | 41 | 37 | 55 | 45 | 2.5 | 2.4 | 1.7 | 2.2 | 1.9 |
| (viii) நெசவு நூலும், தையல் நூலும் ... .. | 42 | 45 | 71 | 80 | 41 | 2.1 | 2.6 | 3.3 | 3.1 | 1.8 |
| (ix) தயாரிக்கப்படாத புகையிலை ... ... | 8 | 6 | 10 | 6 | 3 | 0.4 | 0.3 | 0.5 | 0.2 | 0.1 |
| **3. முதலீட்டப் பொருட்கள் ... ... ...** | 361 | 330 | 383 | 700 | 546 | 17.8 | 19.0 | 17.6 | 27.5 | 23.6 |
| இவற்றில் (i) கட்டட ஆக்கப் பொருட்கள் ... ... | 70 | 48 | 95 | 99 | 119 | 3.4 | 2.8 | 4.5 | 3.9 | 5.1 |
| இவற்றில் (அ) சீமெந்து ... ... | 20 | 9 | 17 | 14 | 7 | 1.0 | 0.5 | 0.8 | 0.6 | 0.3 |
| (ii) போக்குவரத்துச் சாதனங்கள் ... ... | 116 | 89 | 80 | 213 | 126 | 5.7 | 5.1 | 3.7 | 8.4 | 5.4 |
| (ii) எந்திரங்களும், துணைக்கருவிகளும் ... | 162 | 175 | 195 | 368 | 276 | 8.0 | 10 1 | 9.0 | 14.5 | 11.9 |
| **4. மொத்தம் (விடயங்கள் 1, 2, 3) ... ... ...** | 1,992 | 1,702 | 2,159 | 2,510 | 2,291 | 98.2 | 97.9 | 99.4 | 98.7 | 99.0 |
| **5. பகுக்கப்படாத இறக்குமதிகள் .. .. ...** | 36 | 36 | 14 | 33 | 22 | 1.8 | 2.1 | 0.6 | 1.3 | 1.0 |
| **6. எல்லா இறக்குமதிகளினதும் மொத்தம் ... ...** | 2,028 | 1,738 | 2,173 | 2,543 | 2,313 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம: இலங்கை சுங்கப் பகுதியின் புள்ளி விவரங்கள்.

**சீனி**

1970ஆம் ஆண்டின் சீனி இறக்குமதிப் பெறுமதி 1969ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் ரூ. 100 இலட்சத்தால் அதிகரிப்பதற்குரிய முக்கிய காரணம் தொன்னுக்கு கொ. கா. விலை ரூ. 174 அல்லது 38 சதவீதத்தால் அதிகரித்தமையேயாகும். எனினும், இறக்குமதிகளின் அளவு 68 ஆயிரம் தொன்களால் சுருக்கமடைந்தது. சீனியின் சராசரி கொ. க. விலையிலேற்பட்ட அதிகரிப்பு, பன்னுட்டுச் சீனி ஒப்பந்தப்படி ஏற்றுமதி அனுமதிப்பங்குகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பன்னுட்டுச் சந்தையில் உயர்ந்த விலைகள் நிலவியமையாலும், ஏற்றுமதி அனுமதிப்பங்குகளிலேற்பட்ட சிறு வீழ்ச்சிகளை மீளப் பங்கீடு செய்வதிலேற்பட்ட தாமதத்தின் விளைவாலும் ஏற்பட்டதாகும்.

அட்டவணை II (ஒ) 17 சுங்கப் பகுதியின் புள்ளி விவரங்களிற் காட்டப்பட்டுள்ளவாறு, முக்கிய விடயங்களின்படியும் அல்லது பண்டத்தொகுதிகளின் படியும் இறக்குமதிகளைப் பாகுபடுத்திக் காட்டுகின்றது.

1970ஆம் ஆண்டில் ரூ. 2,300 இலட்சத்தால் (சுங்கத் தரவுகளின்படி) வீழ்ச்சியடைந்த இறக்குமதிகளின் பெறுமதியில், நடுத்தரப் பொருட்கள் 'முதலீட்டுப் பொருட்கள்' எனும் பிரிவுகளின் வீழ்ச்சிப் போக்குக் காணப்பட ''நுகர்ச்சிப் பொருட்களின்'' இறக்குமதி, அதிகரிப்பைப் பதிவுசெய்தன. மூன்று தொகுதிகளுக்குமிடையே ஏற்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அளவுகள் பின்வருமாறு.

**நுகர்வுப் பொருட்கள்**

நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளிலேற்பட்ட ரூ. 760 இலட்சங்கொண்ட அதிகரிப்பு 'ஆடைவகைகள்', ''உணவும் குடிவகையும்'' எனும் உபதொகுதிகளில் ஏற்பட்டது. இதேவேளையில் ''ஏனைய நுகர்வுப் பொருட்களின்'' இறக்குமதி ரூ. 190 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது. 1970ஆம் ஆண்டில் உணவும் குடிவகையும் என்பவற்றின் இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 10,690 இலட்சமாக அமைந்து, ரூ. 930 இலட்சங்கொண்ட அதிகரிப்பை வெளிப்படுத்தியது. இதற்கு முக்கிய காரணம் சுங்கப் புள்ளிவிவரங்களில் அரிசி, கோதுமைமா, சீனி முதலிய இறக்குமதிகள் தொடர்பாகப் பதிவுசெய்யப்பட்ட மொத்த தொகைகள் ரூ. 1,210 இலட்சத்தால் அதிகரித்தமையாகும். 'பாலும் பாற்பொருள் உற்பத்தியும்' என்பவற்றுக்கான இறக்குமதிச் செலவீடு ரூ. 30 இலட்சத்தால் அதிகரித்தது. ஆடைவகைகளின் இறக்குமதிப் பெறுமதி முன்னைய ஆண்டினைவிட ரூ. 20 இலட்சங்கொண்ட சிறிதளவு அதிகரிப்பைக் காட்டியது.

**நடுத்தரப் பொருட்கள்**

நடுத்தரப் பொருட்கள் எனும் பாகுபாடு ''பெற்ரோலிய உற்பத்திகளின் இறக்குமதிப் பெறுமதிகள் ரூ. 580 இலட்சமாக அமைந்து, 1969ஆம் ஆண்டின் இறக்குமதிச் செலவுகளுடன் ஒப்பிடும்போது ரூ. 980 இலட்சங்கொண்ட கூர்மையான வீழ்ச்சியைப் புலப்படுத்தியது. இந்தப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி முற்ருக இறக்குமதி செய்யப்பட்ட கலன்களில்[1] 2,610 இலட்சங்கொண்ட கூர்மையான சுருக்கமேற்பட்டமையின் விளைவாகும்: இதன் விளைவு கலனுக்கு சராசரிக் கொ. கா. க. விலையிலேற்பட்ட 18 சதவீதங்கொண்ட அதிகரிப்பினுல் ஈடுசெய்யப்பட்டது. 1970ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பெற்ரோலிய உற்பத்திகள் 960 இலட்சம் கலன்களாகவும் அவற்றின் சராசரி கொ. கா. க. விலை கலனுக்கு 61 சதமாகவும் அமைந்தது. இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட குறைவுக்குரிய காரணம் பெற்ரோலியக் கூட்டுத்

1. சுங்கத் தரவுகள் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தினுல் தரப்பட்ட எண்தொகைகளிலிருந்து வேறுபடுகின்றன. காரணம் முன்னையது எண்ணெய்க் கூட்டுநிலையத்தினுல் இறக்குமதி செய்யப்பட்ட கப்பல் எரிபொருள் எண்ணெயையும் உள்ளடக்கியதாகும். 1970ஆம் ஆண்டில் பெற்ரோலியக் கூட்டுத்தாபனதாதல் தூய்மைப்படுத்தப்பட்ட பெற்ரோலிய உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படவில்லை. பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்குத் தூய்மைப்படுத்தத் தேவைப்பட்ட தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் 1969இல் இறக்குமதி செய்யப்பட்டுக் கொழும்புத் துறைமுகப் பொண்டில் வைத்திருந்த கையிருப்புக்களிலிருந்து பெறப்பட்டன.

தாபனத் தூய்மைப்படுத்தும் நிலையத்தின் தூய்மைசெய்வதற்கான தூய்மைப் படுத்தாத எண்ணெய் மட்டும் இறக்குமதி செய்யப்பட்டமையும், 1969ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவு கையிருப்பு, கொழும்புத் துறைமுகப் பொண்டில் வைத்திருந்தமையும் ஆகும். கா. ஏ. பெ. விலைகளின் அதிகரிப்பு, 1969ஆம் ஆண்டினைவிடச் சந்தை விலைகள் அதிகரித்திருந்த மத்திய கிழக்கு நாடுகளில் அதிக கொள்வனவு செய்தமையால் ஏற்பட்டதாகும். 1970ஆம் ஆண்டில் ''இரசாயன மூலங்களிலும் சேர்க்கைகளிலும்'', ''தாள் தாள் மட்டையும்'' என்பவற்றின் இறக்குமதிச் செலவுகள் ஒவ்வொன்றும் ரூ. 100 இலட்சத்தால் வீழ்ச்சியடைய, 'நூலும் புரியும்' என்பதன் செலவுகள் ரூ. 390 இலட்சத்தால் கூர்மையாக வீழ்ச்சியடைந்தது. 1970ஆம் ஆண்டின் உர இறக்குமதிச் செலவுகள் 1969ஆம் ஆண்டினைவிட ரூ. 150 இலட்சங் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இவ்விறக்குமதிப் பெறுமதியின் அதிகரிப்பு, இறக்குமதி செய்யப்பட்ட அளவு 45 ஆயிரம் தொன்களாக விரிவடைந்தமையும், சராசரி கொ. கா. க. விலை தொன்னுக்கு ரூ. 8ஆல் அதிகரித்தமையாலும் ஏற்பட்டதாகும்.

**முதலீட்டுப் பொருட்கள்**

இப்பிரிவில் இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட ரூ, 1,540 இலட்சங் கொண்ட 'சுருக்கம்' 'போக்குவரத்து இணைப்புக்கள்' 'எந்திர இணைப்புக்கள்' எனும் உப தொகுதிகளில் ஏற்பட்டது. எனினும்' கட்டப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரிப்பைப் பதிவுசெய்தன. போக்குவரத்துச் சாதனங்களின் வழக்கத்துக்கு மாறுன அதிக இறக்குமதிகள் 1969ஆம் ஆண்டில் நடைபெற்றமைக்குரிய காரணங்கள், புகைவண்டிப் பகுதியில் டீசல் மயமாக்கும் திட்டம், இலங்கை விமானச் சேவைக்கு ஒரு வானூர்தி (இட்ரைடன்ற்) இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குப் பேருந்துகள் முதலியவற்றை இறக்குமதி செய்தனவாகும்.

## 4. கொழும்புத் துறைமுகத்தில் அபிவிருத்திகள்

1970ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட சரக்கின் மொத்த அளவு, 27,68,929 கப்பற் தொன்களாக அமைந்து, 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2,57,272 கப்பற் தொன்கள் கொண்ட கூர்மையான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. கையாளப்பட்ட சரக்குகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குரிய காரணங்கள், 1970ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில் 1970இன் முதற்காற் பகுதியில் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன; இரண்டாம் மூன்றும் காற்பகுதியில் பலத்த கடும் மழை காரணமாக வேலை தடைப்பட்டமை, என்பவையாகும். 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து ஏற்றுமதிச் சரக்கின் அளவு 35,016 கப்பற்றென்களால் வீழ்ச்சியடைய, இறக்குமதிகள் அளவு 2,22,256 கப்பற்றென்கள் கொண்ட கூர்மையான வீழ்ச்சியை அடைந்தது.

1969ஆம் ஆண்டின் தொடர்பான காலாண்டுப் பகுதிகளோடு ஒப்பு நோக்கும் முறையில் 1970ஆம் ஆண்டின் ஒவ்வொருகாலாண்டுப் பகுதியிலும் கொழும்புத் துறைமுகத்தால் கையாளப்பட்ட தொன்களின் விவரங்கள் அட்டவணை II (ஒ) 18 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஓ) 18

## கொழும்புத் துறைமுகத்தினூல் கையாளப்பட்ட இறக்குமதி ஏற்றுமதிச் சரக்குகள்

கப்பற்ருென்கள்

| | 1969 | 1970 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | | | முழுவதும் | % |
| 1ஆம் கால் ... | 861,560 | 756,007 | — 105,553 | — 12·3 |
| 2ஆம் கால் ... | 780,538 | 673,648 | — 106,890 | — 13.7 |
| 3ஆம் கால் ... | 763,337 | 648,722 | — 114,615 | — 15.0 |
| 4ஆம் கால் ... | 620,766 | 690.552 | + 69,786 | + 11.2 |
| ஆண்டு .. | 3,026,201 | 2,768,929 | — 257,272 | — 8.5 |

மூலம்: துறைமுக (சரக்குக்) கூட்டுத்தாபனம்.

*1967ஆம் ஆண்டின் அண்டறிக்கை 1667இன் யூனில் சுயெசுக் கால்வாய் மூடப்பட்டவையைத் தொடர்ந்து கேள்வுக் கட்டணங்கள் அதிகமாக விதிக் கப்பட்டமையும், 1967 நவெம்பரில் ஸ்டேர்லிங் பவுணின் நாணயப் பெறு மதி இறக்கத்தையும் எடுத்துக்காட்டியது.*[1]

*இம்மாற்றங்கள் 1969ஆம் ஆண்டிலும், அடிப்படைக் கேள்வுக் கட் டணங்களில்*[2] *செய்யப்பட்ட சில மாற்றங்களுடன் தொடர்ந்தும் நடைமுறை யிலிருந்து வந்தன. 1970ஆம் ஆண்டில் கேள்வுக் கட்டணங்களில் 5 சதவீதத் திலிருந்து 12½ சதவீதம் வரையிலான பொதுவான அதிகரிப்புக்கள் ஏற் பட்டன.*

*1970ஆம் ஆண்டில் கேள்வுக் கட்டணங்களிலேற்படுத்தப்பட்ட பொது வான அதிகரிப்புக்களின் விவரங்கள் பின்வருமாறு.*[3]

(i) **இலங்கை ஐ. அ நா. மாநாடு**
*1970. 1.1 ஐக்கிய அமெரிக்க அத்திலாந்திலாந்தித் துறைமுகங் களுக்கு கட்டும் 5 சதவீதங்கொண்ட பொதுவான கேள்வுக் கட்டண அதிகரிப்பு.*

(ii) **இலங்கை அவுத்திரேலிய மாநாடு**
*1970 3.1 - அவுத்திரேலியா துறைமுகங்கட்கு 7½ சதவீதங் கொண்ட பொதுவான கேள்வுக் கட்டண அதிகரிப்பு.*

(iii) **இலங்கை/நியூசிலாந்து மாநாடு**
*1970 4.1 நியூசிலாந்துத்துறைமுகங்கட்கு 7½ சதவீதங்கொண்ட பொதுவான கேள்வுக் கட்டண அதிகரிப்பு.*

(iv) **இலேமல், பக்கல் நீராவிக்கப்பல் கம்பனி லிமிட்டெட்**
*1970 4.1 கனடா, அத்திலாந்தி, துறைமுகங்கட்கு 5 சதவீதங் கொண்ட பொதுவான கேள்வுக் கட்டண அதிகரிப்பு.*

(v) **இலங்கை, ஐ. இ., கண்டங்கள் மாநாடு**
*1970.9.1 – ஐ. இ. கண்டங்கள் மத்திய தரைக் கடல் துறைகட் கான கேள்வுக் கட்டணங்களில் 12½ சதவீதப் பொதுவான*

1. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 1967ஆம் ஆண்டு பக்கம் 2 பார்க்கவும்.
2. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 1969ஆம் ஆண்டு பக்கம் பார்க்கவும்
3. விவரங்கள் இலங்கைக் கப்பலேற்றுவோர் சபையிடமிருந்து பெறப்பட்டமை.

அதிகரிப்பு. எனினும், தேயிலை மீதான கேள்வுக் கட்டண அதிகரிப்பு $7\frac{1}{2}$ சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டது. 1969ஆம் ஆண்டில் கொழும்பு, கல்கத்தாவுக்கிடையிலான கேள்வுக் கட்டண வித்தியாசத்தைக் குறைப்பதுபற்றி எடுத்துக்கூறப்பட்டது. இரண்டு துறைமுகங்களுக்குமிடையேயும் தேயிலைக்கான கேள்வுக் சட்கட்டணங்களுக்குமிடையேயும் தேயிலைக்கான கேள்வுக்கட்டணத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த மேலே குறிப்பிடப்பட்ட அதிகரிப்பின் குறைந்த விகித வித்தியாசம் மேலும் 5 சதவீதத்தால் குறைக்கப்பட்டது.

### 5. வர்த்தகத்தின் அமைப்பு

1970ஆம் ஆண்டில் முக்கிய நாணயப் பிரதேசங்களுக்கும், பிராந்தியங்களுக்குமான இலங்கையின் ஏற்றுமதிப் பெறுமதிகள், அதிகரிப்புக்கள் வெவ்வேறு அளவுகளைக் காட்டின இது தூ. கி. பெ. கூ. பிரதேசந் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களினதும், பிராந்தியங்களினதும் இறக்குமதிப் பெறுமதிகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. முக்கிய நாணயப் பிரதேசங்களின்படியும், பிராந்தியங்களின்படியுமான வர்த்தக அமைப்பு அட்டவணை II(ஓ) 19இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை II (ஓ) 19

**இலங்கை வணிகப் பொருட்களின் பன்னாட்டு வர்த்தகம் — நாணயப் பிரதேசங்களின்படியும், பிராந்தியங்களின்படியும்**

பத்து இலட்சம் ரூபாய்களில்.

| | மொத்த ஏற்றுமதிகள் க. ஏ. பெ. (அ) | | மொத்த இறக்குமதிகள் (கொ. கா. க.) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1969 | 1970(ஆ) | 1969 | 1970 |
| ஸ்டேர்லிங் பிரதேசம் ... | 745.5 | 850.9 | 974.2 | 944.9 | — 228.7 | — 94.0 |
| டொலர்ப் பிரதேசம் ... | 202.0 | 211.0 | 247.2 | 200.2 | — 45.2 | + 10.8 |
| ஏனையவை .. | 934.9 | 940.9 | 1,322.0 | 1,163.2 | — 387.1 | — 222.3 |
| பொதுநலவமைப்பு நாடுகள் .. | 695.3 | 767.8 | 997.4 | 918.5 | — 302.1 | — 150.7 |
| வெளிநாடுகள் (இ) ... | 1,187.1 | 1,235.0 | 1,546.0 | 1,389.9 | — 358.9 | — 154.9 |
| ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் (ஈ) ... | 174.1 | 198.8 | 325.2 | 283.7 | — 151.1 | — 84.9 |
| ஐரோப்பிய கட்டில்லா வர்த்தக அமைப்பு (உ) ... | 391.1 | 470.4 | 486 9 | 369.6 | — 95.8 | + 100.8 |
| ஆ. தூ. கி. பொ. பிரதேசம் (ஊ) | 520.6 | 541.9 | 1,005.4 | 1,104.8 | — 484.8 | — 562.9 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

(அ) கப்பற் களஞ்சியங்களும் அறைகளும் தவிர்த்து.

(ஆ) பிரயாணிகள் பொதிகள் தவிர்த்து.

(இ) 1965ம் ஆண்டிலிருந்து தென்னுபிரிக்க சங்கத்துடன் செய்த வர்த்தகத் தரவுகளை உள்ளடக்கும்.

(ஈ) பெல்ஜியம், பிரான்சு,, சேர்மனி, இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து.

(உ) ஒஸ்றியா, டென்மார்க், நோர்வே, போர்த்துக்கல், சுவீடன், சுவிற்சலாந்து, ஐக்கிய இராச்சியம்.

(ஊ) ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா (1964 தொடக்கம்), புருணை, பர்மா, கம்போடியா, மக்கள் சீனக்குடியரசு, தய்வான், மலேசியா (மலேயா, வடபோர்ணியா, தொடக்கம், சரவாக்) கொங்கொங், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், யப்பான், வடகொரியா, தென்கொரியா, லாவொஸ் மொன்கோரியா, நேபாளம் நியூசிலாந்து (1964 தொடக்கம்) பாக்கிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், மேற்கு சமோவா, (1964 தொடக்கம்) தாய்லாந்து, வடவியட்னும், தென்வியற்னும்.

அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள மாற்றங்கள் பெருமளவுக்குப் பின்வருவனவற்றைப் பிரதிபலிக்கும்:

(அ) ஏற்றுமதிகளிலேற்பட்ட அதிகரிப்பு ஐக்கிய இராச்சியத்திலிருந்து ரூ. 760 இலட்சமாகவும், யப்பானிடமிருந்து ரூ. 220 இலட்சமாகவும், போலாந்திடமிருந்து ரூ. 140 இலட்சமாகவும், மக்கள் சீனக் குடியரசிடமிருந்து ரூ. 110 இலட்சமாகவும், ஐ. அ. குடியரசிடமிருந்து ரூ. 100 இலட்சமாகவும் அமைந்தன.

(ஆ) இறக்குமதிகளிலேற்பட்ட வீழ்ச்சி ஐக்கிய இராச்சியத்திலிருந்து ரூ. 1,130 இலட்சமாகவும், ஐ. அ. நாடுகளிலிருந்து ரூ. 810 இலட்சமாகவும், சேர்மன் சனநாயகக் குடியரசிலிருந்து ரூ. 750 இலட்சமாகவும்,யூகோசிலாவியாவிலிருந்துரூ.210இலட்சமாகவும்,சேர்மன் கூட்டாட்சிக் குடியரசிலிருந்து ரூ. 200 இலட்சமாகவும், பாக்கித்தானிலிருந்து ரூ. 170 இலட்சமாகவும், ஐ. சோ. சோ. குடியரசிலிருந்து ரூ. 100 இலட்சமாகவும், இத்தாலியிலிருந்து ரூ.100 இலட்சமாகவும் அமைந்தது.

(இ) அவுத்திரேலியாவுக்கும் ஐ. சோ. ச. குடியரசுக்குமான ஏற்றுமதிகளில் ஒவ்வொன்றுக்கும் ரூ. 70 இலட்சங்கொண்ட வீழ்ச்சியும், ஐ. அ. நாடுகள், பாக்கித்தான் ஒவ்வொன்றுக்கும் ரூ. 60 இலட்சங்கொண்ட வீழ்ச்சியும், இந்தியாவுக்கும் தென்னுபிரிக்கக் கூட்டரசுக்கும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 40 இலட்சமும் கொண்ட வீழ்ச்சியும் பதிவுசெய்யப்பட்டது.

(ஈ) இறக்குமதிகளிலேற்பட்ட அதிகரிப்புக்கள் பர்மாவிலிருந்து ரூ.590 இலட்சமாகவும், கனடாவிலிருந்து ரூ. 340 இலட்சமாகவும், போலாந்திலிருந்து ரூ. 250 இலட்சமாகவும், ஐக்கிய அராபியக் குடியரசிலிருந்து ரூ. 180 இலட்சமும், செக்கோசிலாவ்வியாவிலிருந்து ரூ. 170 இலட்சமும், யப்பானிலிருந்து ரூ. 80 இலட்சமும், இந்தியாவிலிருந்து ரூ 130 இலட்சமும், நியூசிலாந்திலிருந்து ரூ. 130 இலட்சமும், அவுத்திரேலியாவிலிருந்து ரூ. 80 இலட்சமும், மக்கள் சீனக் குடியரசிலிருந்து ரூ. 70 இலட்சமாகவும் அமைந்தன.

**மக்கள் சீனக் குடியரசுடனை வர்த்தகம்**

அட்டவணை II (ஒ) 20, 1966–70 ஆண்டுக் காலப்பகுதிக்குரிய, இலங்கையின் மக்கள் சீனக் குடியரசுடனை, வர்த்தகம் தொடர்பான தரவுகளைக் கொடுக்கின்றது.

அட்டவணை II (ஒ) 20

**மக்கள் சீனக் குடியரசுடனை வர்த்தகம் — 1966 – 1970**

| ஆண்டு | ஏற்றுமதி | | இறக்குமதி | | வர்த்தக நிலுவை ப.இ.ரூ. | வர்த்தக மொத்த விற்பனவு | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ப.இ.ரூ. | மொத்த ஏற்றுமதியின் சதவீதம் | பெறுமதி ப.இ.ரூ. | மொத்த ஏற்றுமதியின் சதவீதம் | | பெறுமதி ப.இ.ரூ. | மொத்த வர்த்தக விற்பனவின் சதவீதம் |
| 1966 | 177 | 10.4 | 217 | 10.7 | – 40 | 394 | 10.6 |
| 1967 | 153 | 9.1 | 185 | 10.6 | – 32 | 338 | 9.9 |
| 1968 | 195 | 9.6 | 245 | 11.3 | – 50 | 440 | 10.5 |
| 1969 | 240 | 12.5 | 282 | 11.1 | – 42 | 522 | 11.7 |
| 1970 | 252 | 12.4 | 289 | 12.5 | – 37 | 541 | 12.4 |

மூலம் : இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

1970ஆம் ஆண்டில் மக்கள் சீனக் குடியரசுடனுன, இலங்கை வர்த்தக விற்பனையில் அதிகரிப்பு ஏற்பட்டது. சீனுவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 5 சதவீதத்தால் அதிகரித்து, ரூ. 2,520 இலட்சமாகியவிடத்து இறக்குமதிகள் ரூ. 70 இலட்சம் அல்லது 3 சதவீதத்தால் அதிகரித்து ரூ 2,890 இலட்சமாகியது. 1969ஆம் ஆண்டில் ரூ. 420 இலட்சமாக விளங்கிய வர்த்தகக் குறைநிலை 1970ஆம் ஆண்டில் ரூ. 370 இலட்சமாகக் குறைந்தது. இலங்கையின் மக்கள் சீனக் குடியரசுடனுன ரூ. 5,410 இலட்சமாக அமைந்த நாட்டின் மொத்த வர்த்தக விற்பனவு 12.4 சதவீதமாக அமைந்தது. 1969ஆம் ஆண்டிலும்விட ஏறக்குறைய 1 சதவீதம் அதிகமானதாகும்.

அட்டவணை II (ஒ) 21 1969–70உக்குரிய இலங்கையின் மக்கள் சீனக் குடியரசுடனுன வர்த்தகத்தைப் பாகுபடுத்திக் காட்டுகின்றது.

**அட்டவணை II (ஒ) 21**

**மக்கள் சீனக் குடியரசுடனுன வர்த்தகம் (பண்டங்களின்படியான) 1969 - 1970**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1969 | 1970 | உண்மையான மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | |
| இரப்பர் ... ... ... | 213.0 | 230.5 | + 17.5 |
| தேங்காயெண்ணெ ... ... .. | 27.3 | 20.1 | — 7.2 |
| ஏனையவை .. ... ... | — | 0.9 | + 0.9 |
| **மொத்தம்** ... .. ... | **240.3** | **251.5** | + **11.2** |
| **இறக்குமதிகள்** | | | |
| அரிசி ... ... ... | 207.7 | 213.9 | + 6.2 |
| ஆடை ... ... ... | 32.4 | 47.7 | + 15.3 |
| செத்தல்மிளகாய் ... ... ... | 13.0 | 9.0 | — 4.0 |
| ஆடைகளும் முறுக்கு நூலும் ... ... | 4.9 | 0.2 | — 4.7 |
| பருப்பு வகைகள் ... ... ... | 3.7 | 1.7 | — 2.0 |
| தேயிலைப் பெட்டிகள் ... .. ... | 1.1 | 1.0 | — 0.1 |
| ஏனையவை .. ... ... | 19.1 | 15.8 | — 3.3 |
| **மொத்தம்** ... ... ... | **281.9** | **289.3** | + **7.4** |
| வர்த்தக நிலுவை ... ... ... | -41.6 | 37.8 | — |

மூலம் : இலங்கைச் சுங்கப புள்ளிவிவரங்கள்.

இரப்பர், 1970ஆம் ஆண்டிலும் தொடர்ந்து முக்கிய ஏற்றுமதிப் பொருளாக அமைந்து, ஏற்றுமதிகள் ரூ. 175 இலட்சத்தால் அல்லது 8 சதவீதத்தால் உயர்ந்து ரூ. 2,305 இலட்சமாக அமைந்தது. இந்த அதிகரிப்பு முற்றுக இரப்பர் ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட விரிவின் விளைவாகும். 1969 ஆம் ஆண்டின் 1,571 இலட்சம் இருத்தல்களுடன் ஒப்பிடுமிடத்து 1970 ஆம் ஆண்டின் மொத்த இரப்பர் ஏற்றுமதிகளின் அளவு 1,868 இலட்சம் இருத்தல்களாக அமைந்து 297 இலட்சம் இருத்தல்களாக அதிகரிப்பைக் காட்டியது. தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகள், 1969ஆம் ஆண்டின் ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் ரூ . 72 இலட்சத்தால் சுருக்கமடைந்து காணப்பட்டது. காரணம், அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியும், சராசரிக் க. ஏ. பெ. விலையிலேற்பட்ட வீழ்ச்சியுமாகும். 1970இல் தேங்காயெண்ணெய் ஏற்றுமதிகளின் அளவு 10.3 ஆயிரம் தொன்களுடன் ஒப்பிடுமிடத்து 1969ஆம் ஆண்டின் தொன்னுக்குச் சராசரிக் க.ஏ.பெ. விலையான ரூ. 1991.80 உடன் ஒப்பிடுகையில் சராசரி க. ஏ. பெ. விலை ரூ. 1,961. 60 ஆகவும் அமைந்திருந்தது.

1970இல் மக்கள் சீனக் குடியரசிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருள், தொடர்ந்தும் அரிசியாகவே விளங்கியது. இறக்குமதிகள், ரூ. 2,139 இலட்சம் அல்லது 1969ஆம் ஆண்டினை விட ரூ. 62 இலட்சம் அல்லது 3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஆடைகளின் இறக்குமதி, 1969ஆம் ஆண்டின் ரூ 324 இலட்சத்தைவிட கணிசமான அளவு அதிகரித்து ரூ. 477இலட்சமாக அமைந்தது. செத்தல்மிளகாய் இறக்குமதி 1969ஆம் ஆண்டின் ரூ. 130 இலட்சத்திலிருந்து ரூ. 90 இலட்சமாகக் குறைவுற்றது.

**ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனுமான வர்த்தகம்.**

இப்பிரதேசத்துடனான இலங்கையின் வர்த்தகம் தொடர்பான தரவுகள் அட்டவணை 11 (ஒ) 22இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஒ) 22**

**ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகம்***

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை | வர்த்தக மொத்த விற்பனவு | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த ஏற்றுமதிகளின் சத வீதம் | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த இறக்குமதிகளின் சத வீதம் | ப. இ. ரூ. | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த வர்த்தக விற்பனவில் சத வீதம் |
| 1966 | 154 | 9.1 | 203 | 10.0 | — 49 | 357 | 9.6 |
| 1967 | 104 | 6.2 | 164 | 9.4 | — 60 | 268 | 7.8 |
| 1968 | 163 | 8.0 | 180 | 8.3 | — 17 | 343 | 8.0 |
| 1969 | 165 | 8.6 | 251 | 9.9 | — 86 | 416 | 12.0 |
| 1970 | 174 | 8.6 | 185 | 8.0 | — 11 | 359 | 8.2 |

மூலம் : இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

* பல்கேரியா, செக்கோசிலவாக்கியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, கங்கேரி, போலாந்து, ருமேனியாவும் யூகோசிலாவியாவும்.

1970ஆம் ஆண்டில் இலங்கையின் ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகம் 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ 570 இலட்சம் அல்லது 13.7 சதவீதத்தால் குறிப்பாகச் சுருக்கமடைந்து காணப்பட்டது. இதேவேளையில் ஏற்றுமதிகள் ரூ. 1,740 இலட்சமாகஅமைந்து 1969ஆம் ஆண்டினைதவிட ரூ.90 இலட்சம் அல்லது 5 5. சதவீதத்தால் விரிவடைந்திருந்தது. வர்த்தகக் குறைநிலை ரூ 110இலட்சமாக அமைந்தது. 1969 ஆம் ஆண்டினைவிட ரூ 75 இலட்சம் முன்னேற்றமடைந்து காணப்பட்டது.

1970ஆம் ஆண்டு இலங்கையின் ரூ. 3,590 இலட்சம் அல்லது 8.2 சதவீதங் கொண்ட மொத்த வர்த்தகம் 1969ஆம் ஆண்டினைவிட 3.8 சதவீதம் குறைவானதாகும்

ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகப் பண்டப்படியான பகுப்பு, அட்டவணை 11 (ஒ) 23இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஒ) 23

### ஐ. சோ. ச. குடியரசு, கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகத்தின் பெறுமதி (பண்டவகையான)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | பல்கேரியா | | செக்கோ சிலவியா | | சே. ச. கு. | | கங்கேரி | | போலாந்து | | ரூமேனியா | | யூகோ சிலாவியா | | ஐ.சோ. ச. கு. | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 |
| (i) **மொத்த ஏற்றுமதிகள்** | **1.99** | **2.09** | **3.60** | **3.49** | **13.61** | **19.63** | **1.37** | **2.03** | **27.21** | **40.65** | **19.70** | **19.04** | **7.37** | **4.41** | **89.49** | **82.33** | **164.34** | **173.67** |
| அவற்றில் | | | | | | | | | | | | | | | | | | |
| தேயிலை ... | — | 0.93 | ... | 0.23 | 0.14 | 0.09 | 0.21 | 0.19 | 6.83 | 7.25 | ... | — | 0.08 | 0.17 | 14.42 | 18.20 | 21.68 | 27.06 |
| இரப்பர் ... | 1.34 | 1.11 | 1.16 | 0.36 | — | — | — | 0.50 | 18.35 | 29.91 | 15.90 | 16.89 | 1.34 | 0.49 | 35.32 | 28.48 | 73.41 | 77.74 |
| மூன்று முக்கிய தெங்குப் பொருட்கள் ... | — | — | 1.09 | 2.25 | 12.38 | 18.52 | 1.16 | 1.33 | 0.99 | 2.85 | 1.99 | 2.15 | 4.20 | 1.75 | 36.19 | 27.36 | 58.00 | 56.21 |
| (ii) **மொத்த இறக்குமதிகள்** | **1.06** | **0.54** | **13.34** | **30.41** | **84.62** | **10.01** | **11.38** | **7.59** | **23.42** | **48.35** | **15.05** | **18.11** | **51.00** | **30.47** | **50.70** | **39.79** | **250.57** | **185.27** |
| அவற்றில் | | | | | | | | | | | | | | | | | | |
| சீனி .. | — | — | 3.68 | 20.84 | 12.89 | — | 1.16 | — | 7.68 | 36.37 | 5.52 | 6.75 | 45 53 | 26.95 | 18.57 | 18.17 | 95.03 | 109.08 |
| எந்திரங்கள், உறுப்புக்கள் .. | 0.05 | 0.01 | 3.44 | 2.37 | 40.89 | 8.63 | 0.13 | 0.23 | 0.52 | 0.19 | 1.72 | 2.36 | 2.84 | 0.89 | 0.73 | 3.20 | 50.32 | 17.88 |
| ஆடைவகைகள் ... | 0.47 | 0.49 | 3.61 | 5.82 | 0.09 | — | 0.86 | 5.52 | 10.92 | 6.81 | 0.53 | 1.66 | — | — | 3.44 | 3.94 | 19.92 | 24.24 |
| தேயிலைப் பெட்டிகள் ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 11.62 | 6.59 | 11.62 | 6.59 |
| இரும்பு, உருக்குப் பொருட்களும், மற்றும் இவற்றோடு இணைந்த பொருட்களும் ... | — | — | 0.43 | 0.19 | 0.75 | 0.14 | ... | ... | 1.30 | 1.27 | — | 2.83 | 0.43 | 1.22 | 0 81 | 1.32 | 3.72 | 6.97 |
| பெற்றோலிய உற்பத்திகள் ... | — | — | — | — | — | ... | — | — | — | — | 3.14 | — | — | ... | 3.25 | ... | 6.39 | ... |
| சீமெந்து ... | — | — | — | — | — | — | — | ... | — | — | — | — | — | — | 5.47 | 2.91 | 5.47 | 2.91 |
| வர்த்தக நிலுவை (i)-(ii) ... | + 0.93 | + 1.55 | - 9.74 | - 26.92 | - 71.01 | + 9.62 | - 10.01 | - 5.56 | + 3.79 | - 7.70 | + 4.65 | + 0.93 | -43.63 | -26.06 | +38.79 | +42.54 | -86.23 | -11.60 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

1970ஆம் ஆண்டில் ஐ சோ. ச. குடியரசு மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் ரூ. 823 இலட்சம் அல்லது 47 சதவீதத்துக்கு வகைகூறித் தொடர்ந்தும் இலங்கையின் இப்பிரதேச முக்கிய வாடிக்கையாளராக விளங்கியது. 1969ஆம் ஆண்டில் இது 54 சதவீதத்துக்கு வகைகூறியது. ஐ.சோ.ச குடியரசிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரப்பர், தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் குறைந்தமையினால் ரூ.72 இலட்சத்தால் சுருக்கமடைந்தது. எப்படியாயினும், தேயிலை ஏற்றுமதிப் பெறுமதிகள் கடந்த ஆண்டினைவிட ரூ.38 இலட்சம் அதிகரித்துக்காணப்பட்டது.

இப்பிரதேசத்தின் அடுத்த முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளராக போலாந்து விளங்கியது இத்தொகுதி நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தத் தொகையில் 23 சதவீதத்திற்கு, இது வகைகூறிற்று. போலாந்துக்கான 1970ஆம் ஆண்டின் ஏற்றுமதி ரூ.407 இலட்சமாக அமைந்த பெறுமதிகள் 1969இன் பெறுமதியைவிட ரூ. 135 இலட்சம் அல்லது 50 சதவீதமளவு விரிவடைந்திருந்தது. போலாந்துக்குக் கடந்த சிலவாண்டுகளாக ஏற்றுமதிசெய்யப்பட்ட முக்கிய ஏற்றுமதியான இரப்பர் ரூ. 115 இலட்சம் அல்லது 62.5 சதவீத கணிசமான அளவு அதிகரிப்பைப்பதிவுசெய்திருந்தது.

சேர்மன் சனநாயகக் குடியரசுக்கான மொத்த ஏற்றுமதிகள் ரூ. 196 இலட்சமாக அமைந்து ரூ. 60 இலட்சம் அல்லது 44 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. சேர்மன் சனநாயகக் குடியரசுக்கான தேங்காயெண்ணெய் ஏற்றுமதி ரூ. 94 இலட்சமாக அமைந்து 1969ஆம் ஆண்டினைவிட ரூ. 58 இலட்சம் அல்லது 133 சதவீதத்தால் அதிகரித்தது. சேர்மன் சனநாயகக் குடியரசுக்கான தேங்காய்த் துருவல் ஏற்றுமதி அளவு 21.7 ஆயிரம் அந்தர்களால் வீழ்ச்சியடைந்த போது, 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இருத்தல் ரூ. 0.81 ஆகவிருந்த சராசரி க.ஏ.பெ. விலை, இருத்தல் 1.10 ஆக உயர்ந்ததன் விளைவாக ஏற்றுமதிப் பெறுமதியில் அதிகரிப்புக் காணப்பட்டது.

1970ஆம் ஆண்டில் ரூமேனிய இப்பிரதேசத்துக்கான மொத்த ஏற்றுமதிகளில் 11 சதவீதத்துக்கு வகைகூறிற்று. 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதியின் மொத்தப் பெறுமதி ரூ. 190 இலட்சமாக மாற்றமுறாது விளங்கியது. ரூமேனியாவுக்கான இரப்பர் ஏற்றுமதிகள் இரப்பருக்கான சராசரிக் க.ஏ.பெ விலைகளிலேற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக ரூ. 10 இலட்சத்தால் அதிகரித்து, ரூ. 60 இலட்சமாக அமைந்தது.

1970ஆம் ஆண்டில் போலாந்து, ஐ.சோ.ச.கு. யூகோசிலாவியா, சேக்கோசிலவாக்கியா எனும் நாடுகள் இப்பிரதேசத்தின் முக்கிய இறக்குமதி வழங்குவோர்களாக விளங்கின இவை, கூட்டமாக ரூ. 1,853 இலட்சங்கொண்ட இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதியில் 80 சதவீதந்துக்கு வகைகூறின.

1969ஆம் ஆண்டின் இறக்குமதிகளின் மொத்தப்பெறுமதியின்பங்காகிய 9சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 1970ஆம் ஆண்டில் போலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி ரூ. 484 இலட்சமாக அமைந்து. இது, அப்பிரதேசங்களின் 26 சதவீதத்துக்கு வகைகூறிற்று.

1970ஆம் ஆண்டில் போலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 287 இலட்சத்தால் அதிகரித்து ரூ. 364 இலட்சமாக அமைந்தது. ஆடைவகைகளின் இறக்குமதிப் பெறுமதி ரூ. 41 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்து போலாந்துடனான 1970 ஆம் ஆண்டுக்குரிய வர்த்தக நிலுவை, 1969ஆம் ஆண்டின் ரூ. 38 இலட்சங்கொண்ட மிகைக்கெதிராக ரூ. 77 இலட்சங்கொண்ட குறைநிலையைக் காட்டியது.

1970ஆம் ஆண்டில் ஐ.சோ.ச.கு. இன் இறக்குமதிகள் ரூ. 109 இலட்சத்தால் குறைவடைந்து ரூ. 398 இலட்சமாக அமைந்தது. 1970ஆம் ஆண்டின் மொத்த இறக்குமதிப் பெறுமதிகளிலேற்பட்ட குறைவுக்கு, தேயிலைப் பெட்டிகள் ரூ.50 இலட்சத்தாலும், சீமெந்து ரூ.26 இலட்சத்தாலும், பெற்றோலியப்

பொருட்கள் ரூ.33 இலட்சத்தாலும், வீழ்ச்சியடைந்தமை காரணமாக அமைந்தது. ஐ. சோ ச. கு. இன் 1970இன் ஆண்டு வர்த்தக நிலுவை, 1969ஆம் ஆண்டின் ரூ. 388 இலட்சங்கொண்ட மிகையுடன் ஒப்புடுமிடத்து, ரூ. 425 இலட்சங்கொண்ட மிகையைக் காட்டியது.

1970ஆம் ஆண்டில் யூகோசிலாவியாவிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதிகள் ரூ. 205 இலட்சத்தாற் குறைவுற்று, ரூ. 305 இலட்சமாக அமைந்தது. அட்டவணை II (ஒ) 23இற் காட்டப்பட்டுள்ளவாறு, 1969ஆம் ஆண்டோடு ஒப்பிடுமிடத்து, சீனி இறக்குமதி ரூ. 270 இலட்சமாக அமைந்து ரூ. 185 இலட்சம் அல்லது 41 சதவீதத்தாலும் குறைந்தது. இதேபோல ஆய்வுக்குரிய ஆண்டில் எந்திரங்களினது இறக்குமதி குறைந்திருந்தது.

1970ஆம் ஆண்டு யூகோசிலாவியாவுடனான வர்த்தக நிலுவை ரூ.261 இலட்சங்கொண்ட குறைநிலையைக் காட்டியது.

1970ஆம் ஆண்டில் செக்கோசிலாவியாவிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி அதிகரித்த சீனி இறக்குமதிகளின் காரணமாக 1969ஆம் ஆண்டின் ரூ. 133 இலட்சத்திலிருந்து ரூ. 304 இலட்சமாக அமைந்து, ரூ. 171 இலட்சத்தால் அதிகரித்தது. செக்கோசிலாவியாவுடனான 1970ஆம் ஆண்டின் வர்த்தக நிலுவை, 1969ஆம் ஆண்டின் ரூ. 97 இலட்சங்கொண்ட குறைநிலைக்கெதிராக ரூ. 267 இலட்சங்கொண்ட குறைநிலையைக் காட்டியது.

இப்பிரதேசத்திலிருந்து மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் பெறுமதி ரூ. 1,091 இலட்சமாக அமைந்து, எல்லா மூலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் 64 சதவீதமாக அமைந்தது, இதுபோல மேற்கூறப்பட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்து இறக்குமதிகள், அத்தகைய இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதியில் 40 சதவீதமாக அமைந்தது,

**இருபுடைத் தீர்பனவுக் கணக்குகள்**

மக்கள் சீனக் குடியரசுடனும் ஐ. சோ. ச. கு. உடனும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் மத்திய கிழக்கு நாடுகளிலும் இலங்கையினுற் கைச்சாத்திடப்பட்ட கொடுப்பனவு உடன்படிக்கைகளின் நிபந்தனைகட்கிணங்க உள்ள இருபுடைத் தீர்பனவுக் கணக்குகளின் தேறிய மொத்தக் காலாண்டு நிலையை அட்டவணை II (ஒ) 24 எடுத்துக் காட்டுகின்றது.

**அட்டவணை II (ஒ) 24**

**இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகள்**
**1969 – 70ஆம் ஆண்டுக் கணக்குகளின் காலாண்டுகளின் தேறிய மொத்தக் கணக்குகளின்படி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| முடிவிலுள்ள தேறிய விலை | | சீன, ஐ. சோ. ச. குடியரசு, ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் | | மத்திய கிழக்கு நாடுகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வரவு | பற்று | வரவு | பற்று | வரவு | பற்று |
| 1969 | மாச்சு ... | 175.7 | — | — | 9.7 | 166.0 | — |
| | யூன் .. | 130 5 | - | — | 10.3 | 120.2 | — |
| | செத்தெம்பர் ... | 134.5 | — | — | 6.1 | 128 4 | — |
| | திசெம்பர் ... | 169.4 | — | — | 4.5 | 164.2 | — |
| 1970 | மாச்சு ... | 198.6 | — | — | 10.3 | 188.3 | — |
| | யூன் .. | 156.1 | — | — | 9.2 | 146.9 | — |
| | செத்தெம்பர் ... | 86.7 | — | — | 9.2 | 77.5 | — |
| | திசெம்பர் ... | 74.3 | — | — | 8.8 | 65.5 | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* பல்கேரியா, செக்கோசெலவாக்கியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, கங்கேரி, போலாந்து, ருமேனியா, யூகோசிலவியா, கொறியா மக்கள் சனநாயகக் குடியரசு.

** சிரியா

வரவு: இலங்கை கொடுக்கவேண்டியது.

பற்று: இலங்கைக்குக் கிடைக்கவேண்டியது.

1970ஆம் ஆண்டின் முடிவிலுள்ளநிலே, இலங்கையினல் செலுத்தப்பட வேண்டிய தொகை, 1969ஆம் ஆண்டு இறுதிநிலேயுடன் ஒப்பிடுமிடத்து ரூ. 994 இலட்சத்தால் குறைந்திருப்பதை அட்டவணே II (ஒ) 24 புலப்படுத்துகின்றது.

## 6. வர்த்தகக் கொள்கையிலேற்பட்ட அபிவிருத்திகள்

### ஏற்றுமதிக் கட்டுப்பாடு

1970ஆம் ஆண்டு பெப்புருவரி 24ஆந் திகதி தொடக்கம் கப்பலேற்றுவோர் களஞ்சியத்தில் வழங்கப்பட்ட மெத்தைத் தும்பு அந்தரின் ஆகக்குறைந்த விலே ரூ. 13.50 ஆகவும் மெத்தைத் தும்பு தவிர்ந்த ஏனைய எல்லாத் தரங்களும் விலே ரூ. 32.00 ஆகவும் ஆக்கப்பட்டது. (1970, பெப்புருவரி 24ஆந் திகதிய இலங்கை அரசாங்க சிறப்புச் செய்திமடல் இல. 14894/4)

### இறக்குமதிக் கட்டுப்பாடு

1968ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைமுறைக்கு வந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு முறைகள் தொடர்ந்தும் 1970 ஒகத்து 4 வரை நடைமுறையிலிருந்தன. இந்தத் திகதி தொடக்கம் கட்டுப்பாடில்லாப் பொது உத்தரவுச் சீட்டு முறை நீக்கப்பட்டு இதுவரை பொது உத்தரவுச் சீட்டுக்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட எல்லாப் பொருட்களும் வர்த்தக அனுமதிப் பங்குமுறையின் கீழ் கொண்டு வரப்பட்டன.[1] எனினும், இத்தகைய இறக்குமதிகள் யாவும் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. கட்டுப்பாடில்லாத பொதுஉத்தரவுச் சீட்டுமுறையை நீக்குவதன் தொடக்க நடவடிக்கையாக, 1970 மே 29 தொடக்கம், முதிர்ச்சியடையும் இறக்குமதி உண்டியல்களை மீட்பதற்கு அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்படும் அனுமதிச் சீட்டுக்களின் வெளிநாட்டுச் செலாவணி அனுப்புதல் தவிர ஏனையவற்றிற்கு வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழின் விற்பனை முற்ருகத் தடைசெய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழிலாளர்களைப் பொறுத்தவரை கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சு அவைகளின் தேவைகளை உண்மையாகப் பணிப்பாளர் உத்தரவுச் சீட்டுகளின் பேரில் தொடர்ந்தும் வழங்கிற்று.

## 7. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம்

1968, மேயில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் 1970ஆம் ஆண்டிலும் நடைமுறையில் இருந்தது. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழின் விலே, ரூ. 100 முகப்பு மதிப்புக் கொண்ட சான்றிதழுக்கு ரூ. 55 ஆக இருந்தது.

1970–71ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்திற் கூறப்பட்டது போன்று தொடர்ந்து, புத்தகங்கள், சஞ்சிகைகள், இரண்டு சில்லு இழுபொறிகள், உபகரணங்களும், துணை உறுப்புக்கள், பருத்தி நூலும் பருத்தியும் ஆகிய பொருட்களின் இறக்குமதிகள் (அ) பிரிவுக்கு மாற்றப்பட்டு. வெ. செ. உ. சா. விலிருந்து விலக்கப்பட்டன இதேவேளையில் சீனி, சோளம், இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கை மின்சாரச் சபை என்பவற்றின் இறக்குமதிகள் யாவும், ''பி'' பிரிவுக்கு மாற்றப்பட்டு வெ. செ. உ. சா. கொடுப்பனவுக்குட்படுத்தப்பட்டன.

1. இலங்கை அரசாங்கச் சிறப்புச் செய்திமடல் இல. 14,919/2 1970 ஒகத்து 4.

## 8. இறுப்புக்கள்

**ஏற்றுமதித் தீர்வைகள்**
*1970. 10. 25.*[1]

இயற்கைக் காரியத்தின் மீதான தீர்வை க. ஏ. பெ. உண்மைக் கொழும்புப் பெறுமதி 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

**இறக்குமதித் தீர்வைகள்**
*1970. 10. 26.*[2]

இறக்குமதித் தீர்வை அமைப்பினைச் சிக்கனமாகவும், இலகுவானதாக்குவதற்காகவும் 1970ஆம் ஆண்டு ஒற்றோபர் 26 தொடக்கம், நடைமுறையிலுள்ள இறக்குமதி வரிகள், இலகுவாக அடையாளங் கண்டுகொள்ளக்கூடிய சிறு எண்ணிக்கைக் கொண்ட வரி விகித அளவுகளாக மீள ஆய்ந்து, தொகுக்கப்பட்டன. இப்புதிய தொகுப்பு முறை, அபிவிருத்திக்கு முக்கியமான மூலப் பொருட்களையும், ஏனைய இன்றியமையாத நடுத்தரப் பொருட்களையும், முதலீட்டுப் பொருட்களையும் குறைந்த வரி விகிதங்களில் இறக்குமதி செய்ய அனுமதிப்பதன் மூலமும், அதே சமயம் உள்ளூர்க் கைத்தொழில், விவசாயம் என்பவற்றுக்கு அதிக பாதுகாப்பு அளிப்பதன் மூலம், இறக்குமதிப் பதிலீடுகட்கு உதவுவதன் மூலமும், பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டன.

புதிய இறுப்பு அட்டவணை இறக்குமதித் தீர்வைகளை ஆறு அடிப்படைத் தீர்வைகளாகத் தரப்படுத்தியது. வாழ்க்கைச் செலவுகட்கும் அடிப்படை நுகர்ச்சிப் பொருட்கள், தீர்வையில்லாமலும், அடிப்படைக் கைத்தொழில் மூலப்பொருட்களும், கைத்தொழில், விவசாயம் தொடர்பான முக்கிய எந்திரங்களும், பெயரளவிலான தீர்வை விகிதங்கட்கும் விதிக்கப்பட்டன. நியம தீர்வை விகிதமாக 60 சதவீதம் குறிக்கப்பட்டது. இந்த மட்டத்தைவிட உயர்ந்த தீர்வை விகிதங்கள், உள்ளூர் உற்பத்திகட்குப் பாதுகாப்பளிக்கவும், உள்ளூரில் உபகரணங்களின் / துணைக்கருவிகளின் உற்பத்திக்குத் தூண்டுதல் வழங்கவும், எதிர்காலத்தில் அபிவிருத்தியடையக்கூடிய மூல வளங்களைக் கொண்ட துறைகளின் புதிய முயற்சிகளை ஊக்குவிக்கவும் அமைக்கப்பட்டன. அதிக உயர்ந்த தீர்வை விகிதங்கள் முற்றாக இன்றியமையாத பொருட்கட்கும், ஆடம்பரப் பொருட்களுக்குமே விதிக்கப்பட்டன.

## 9. வர்த்தக உடன்படிக்கைகள்[3]

மீளப் பார்வையிடும் இவ்வாண்டில் பின்வரும் நாடுகளுடன் இலங்கை வர்த்தக உடன்படிக்கைகள் செய்தது:

1. ஐக்கிய அரபுக் குடியரசு: 1970 பெப்ருவரி 14
2. கொரியா மக்கள் ஜனநாயக குடியரசு: 1970 பெப்ருவரி 21
3. ஐ. சோ. ச. குடியரசு: 1970 நவெம்பர் 2
4. பாகிஸ்தான்: 1970 நவெம்பர் 19
5. பல்கேரியா மக்கள் குடியரசு: 1970 நவெம்பர் 27

---

1. இலங்கை அரசாங்க 1970, ஒற்றோபர் 25ஆந் திகதிய 14929/2 ஆம் இலக்கச் சிறப்புச் செய்தி மடல்.
2. இலங்கை அரசாங்க 1970 ஒற்றோபர் 26ஆந் திகதிய 14929ஆம் இலக்கச் சிறப்புச் செய்திமடல்.
3. இப்பிரிவிலுள்ள மேற்கூறிய வர்த்தக உடன்படிக்கைகள் தவிர்த்து இலங்கை பல அந்நிய நாடுகளுடன் வர்த்தக/அல்லது கொடுப்பனவு உடன்படிக்கைகளை தொடர்ந்து வைத்திருந்தது.